1189

தொகுதி 8.] 1929௵ ஜூலைமீ 1௳. [பகுதி 6

OFFICE OF THE REGISTRAR
No.
23 AUG 1929

# மனமோகினி.

ஆசிரியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தா
...முனிசாமி முதலியார்,
...னந்த நிலையம். சென்னை.

3L
M241, N22M4
N29.8.6.
186535

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞ பிப்ரவரி மீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட **"அமராவதி" "பவளத்தீவு"** "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" **"கற்பகச் சோலையின் அற்புதக் கோலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது, இரகசிய சங்கம்"** என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது **"சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி"** என்கிற நாவல் நடந்து வருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி மீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ரூ. 9 10 0
**அர்ஜுனஸிங், சுந்தர்** ,, 0 2 0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை ரூ. 1 4 0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் ,, 3 4 0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் ,, 2 0 0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் ,, 1 12 0

---

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ

23 AUG 19

அச்சமயம் மெதுவாக மணியடிக்கும் சத்தம் கேட்டது. அது எதிர்பாராத விஷயமாதலின் வரதாஸிங்கு முதலில் மிக்க வியப்பால் திடுக்கிட்டான். ஆனால் மறுவிநாடி அது சங்கரதாஸிடமிருந்தே உண்டாயிற்றென்று தெரிந்ததும் அவனிடம் தந்தியில்லா டெலிபோனிருக்கும் நினைவு வந்ததும் சங்கதியை யறிந்து கொண்டான். சங்கரதாஸின் கட்டளைப்படித் தானே யக்கருவியை இரசாயன சாலையிலிருந்து எடுத்து வந்து சந்திராபாயிடம் அளித்தான்.

சங்கரதாஸ் சட்டென்று டெலிபோன் கருவியை யெடுத்து வில்லை முடுக்கிவிட்டுச் செவியில் வைத்துக் கேட்டான். அருகிலிருப்பவர்களுக்குச் சங்கரதாஸ் கூறுவது மட்டுமே கேட்கிறதன்றி வருகிற சமாசாரம் கேட்கவில்லை. ஆயினும் சங்கரதாஸின் முகத்தில் உடனே உண்டான மாறுதலான குறியால் ஏதோ பயங்கரமான விபரீத சங்கதியே வந்திருக்கிறதென்று வரதாஸிங் உணர்ந்து கொண்டான். அதிலும் சந்திராபாய்க்கே ஏதோ பெரிய ஆபத்து நேர்ந்திருக்கிறதென்று தெரிந்து கொண்டான். ஏனெனில் அவள் மட்டுமே அக்கருவியின் மூலமாகப் பேசக்கூடியவள்.

மறுவிநாடி சங்கரதாஸ் கூறியதைக் கேட்டதும் வரதாஸிங் மிக்க கலக்கமும் பிரமையு மடைந்து விட்டான். ஏனெனில், சங்கரதாஸ்,

“உன்னிடம் ஒரு தீபம் அகப்பட்டால் அதை யெந்திரச் சந்தின் வழியாகவாவது வெளியில் காட்டு. நாங்கள் எப்படியாவது உன்னைக் கண்டு பிடித்து விடுவோம். நீ மட்டும் தைரியத்தை யிழந்து விடாதே” என்று பதில் அளித்தான்.

அதைக்கேட்டதே வரதாஸிங் முதலியவர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். சங்கரதாஸ் பெரிய நாயகத்தை

186535

நோக்கி வாணுத்துறையைச் சுட்டிக்காட்டி "அத்திக்கே யதிவேகமாய்ப் படகைச் செலுத்து" என்றான். சங்கரதாஸ் தன் பூதக்கண்ணாடி மூலமாய் முன்னோக்கிப் பார்த்துக்கொண்டே சந்திராபாய் சிக்கிக்கொண்டிருக்கும் சங்கதியை வரதாஸிங் முதலியார்களுக்குக் கூறினான்.

வரதாஸிங்கும் பெரிய நாயகமும் கடலை யுற்று நோக்கிக்கொண்டு "என்ன தெரிகிறது சங்கரதாஸ்?" என்றார்கள். சங்கரதாஸ் "இன்னும் வேகமாகப் படகை விட வேண்டும். அதென்ன பாருங்கள்" என்று கண்ணாடியை யவர்களிட மளித்தான். அவர்கள் பார்த்தபோது தூரத்தில் கடலில் ஒரு சிறிய விளக்கு முன்னும் பின்னும் ஆட்டப்படுவது தெரிந்தது.

* * * * *

கப்பலில் சிறைபாக்கப்பட்டிருக்கும் சந்திராபாய் டெலிபோன் கருவியின் மூலமாய்ச் சங்கரதாஸுக்குச் சங்கதியை யறிவித்தாள். கப்பலிலிருப்பவர்களுக்கு எங்கே கேட்டுவிடுமோவென்று அவள் மெதுவாகவே கூறினாள். சங்கரதாஸ் பதில் அறிவித்ததே அவளுக்கு மிக்க தைரியமும் உற்சாகமு முண்டாயின. நாம் கப்பலிலிருந்து தீபத்தைக் காட்டினால் அதைப் பார்க்கும்படியான சமீபத்திலேயே சங்கரதாஸ் இருக்கிறான் என்று உணர்ந்ததும் நாம் எப்படியும் காப்பாற்றப்படுவோம் என்ற தைரியமுண்டாயிற்று. ஆபத்தில் தைரியம்மட்டும் இருந்தால் பெரும்பாலும் வெற்றி பெறலாமன்றோ.

சந்திராபாய் உடனே டெலிபோன் கருவியை வைத்துவிட்டு அறையை நோக்கினாள். அறையின்மேல் ஒரு கொக்கியில் ஒரு இராந்தர் மாட்டப்பட்டிருந்தது. அந்த ஒரு தீபமே அங்கு எரிந்துகொண்டிருந்தது. சந்திராபாய் அதை

யெடுத்துக் கப்பலின் பக்கச்சுவர்போன்ற பலகையில் இருக்கும் துவாரத்தில் தன்னால் கூடியவரையில் காத்தைத் தூர நீட்டித் தீபத்தை முன்னும் பின்னும் ஆட்டத் தொடங்கினாள். இதையே சங்கரதாஸ் முதலியவர்கள் கண்டது.

சந்திராபாய் கப்பலில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டதே கப்பித்தானாகிய கங்காதரன் நங்கூரம் தூக்கிப் பாய் மரங்களை விரித்துக் கப்பலைப் புறப்படச் செய்யவேண்டியதற்கு அவசியமான கட்டளைகளைப் பிறப்பித்து விட்டான். சற்றுநேரத்திற்குள் கப்பலும் புறப்பட்டு விட்டது.

கப்பல் சென்றுகொண்டே யிருக்கையில் கங்காதரன் மேல்தட்டில் இருக்கும் இருப்புக்கிராதியின் ஓரத்தில் நின்று நாற்புறங்களிலும் நோக்கிக்கொண் டிருந்தான். அவன் கரையைவிட்டுக் கடலில் சென்று நாட்களாயின. இங்கும் கரையிற்றங்க அனுகூலமில்லை. இனிச் சீனாவிலுள்ள ஷாங்கே துறைமுகம் சேர்ந்தபிறகே அவன் கரையிற் செல்லக்கூடும். இதனால் அதிருப்தியான மனதோடு அவன் பார்த்துக் கொண்டே யிருக்கையில் கப்பலுக்குச் சமீபத்தில் கடலில் தீபவொளி பிரகாசிப்பதைக் கண்டான்.

கப்பித்தான் உடனே ஓரமே சுற்றிக்கொண்டு அவ்வொளி பிரதிபலிக்கும் இடத்திற்கு நேராக வந்ததும், சந்திராபாய் தன் கரத்தை வெளியில்விட்டு இராந்தலை யாட்டிக்கொண் டிருப்பதைக் கண்டான். "அட சனியன் பிடித்த பெண்ணே!" என்று கூறிக்கொண்டே சென்று கப்பலிலிருக்கும் இரும்புக்குறடுகளில் ஒன்றை யெடுத்துக் கொண்டுபோய் கப்பலின் கிராதியருகில் நின்று சந்திராபாயின் கரத்திலிருந்த இராந்தலை யடித்தான். அது பொடிப் பொடியாய்ப் போய்விட்டது. இராந்தலின் கைப்பிடி மட்டுமே சந்திராபாயின் கரத்தில் நின்றது. அவள் பீதியடைந்து அறைக்குள்போய் உட்கார்ந்து கொண்டாள்.

சந்திராபாய் தான் தப்புவதற்குக் கடைசியாக விருந்த வழியும் போய்விட்டது என்று இடிவிழுந்தவளாகி விட்டாள். கப்பலின் மேல்தட்டில் காவலிருப்பவர்களில் ஒருவன் கங்காதரனிடம் வந்து, "கப்பித்தான்! அதென்ன பாரும்" என்று கப்பலின் பின்பக்கம் சுட்டிக்காட்டினன்.

கங்காதரனும், சந்திராபாய்க்குக் காவலாக விபாங்கன் அனுப்பிய சீனக்காரனும் மற்றபேரும் தங்கள் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளை யெடுத்து அவற்றின் மூலமாக நோக்கினார்கள் துரிதமாக வரும் ஒரு படகு எதையோ தேடுவது போல் சோதனை விளக்கின் வெளிச்சத்தை வீசுவதைக் கண்டார்கள்.

கங்காதரன் உண்மையை யறிந்துகொண்டு "ஓ! இது துரைத்தனச் சுங்க இலாகாப்படகு." என்று கூறியதும் தூரதிருஷ்டிக் கண்ணாடியை யெடுத்து ஜேபியில் வைத்துக்கொண்டு, "சீக்கிரம் மற்றப் பாய்களையும் விரியுங்கள். உதவி எந்திரமும் வேலைசெய்யட்டும்" என்று கூறி, அதற்கு வேண்டிய கட்டளைகளைக் கூவினன்.

இப்போது கங்காதரனுக்கும் மற்றவர்களுக்கும் தங்களுக்கே ஆபத்து வந்துவிட்டதென்று தெரிந்துவிட்டது. அவர்கள் முகங்கள் வாடிவிட்டன. அக்கலக்கத்தில் சந்திராபாயைச் சற்றுநேரம் மறந்துவிட்டார்கள். ஆனல் சந்திராபாய்க்காக விபாங்கன் காவல்வைத்த சீனக்காரன்மட்டும் அவளை மறக்கவில்லை.

அத்துஷ்டன் தன் மடியில் இருந்த ஒரு கத்தியை யெடுத்துக் காத்தில் பிடித்துக்கொண்டு அங்கிருந்து சந்திராபாயின் அறையை நோக்கிச் சென்றான்.

தன் முயற்சி பாழ்பட்டுப் போய்விட்டதை யறிந்த சந்திராபாய் மிக்க நுட்பமாய் எதையும் கவனிக்கத் தொடங்

கினள். மேல்தட்டில் ஏதோ குழப்பம் நடக்கிறது அவள் செவியில் வீழ்ந்தது. அவள் உடனே அந்த அறையிலிருந்த நாற்காலியை யெடுத்துக் கதவின் பின் முட்டு வைத்தாள்.

அவள் நற்காலமாய்த் தெய்வ சித்தத்தின்படி யப்படிச் செய்தது மிக்க நல்லதாயிற்று. ஏனெனில் மறுவிநாடியே யாரோ கள்ளத்தனமாய்த் தன் அறையை நோக்கி மெதுவாக வருவதை யுணர்ந்தாள். அப்படி வந்தவன் அந்தச் சீனக்காரனே. அவன் கதவின் அருகில் வந்து நிற்பதை சந்திராயாய் தெரிந்து கொண்டாள். அக்கொலைபாதகன் அங்கு வந்து நின்றதும் தான் அறைக்குள் நுழைந்ததும் சந்திராபாயைக் கொன்று விடலாம் என்ற நம்பிக்கையால் மறுபடி தன் கத்தியைத்தடவிப் பார்த்துக் கொண்டான்.

அதேவிநாடி அறையின் உட்பக்கம் தாளிடப்பட்டதும் நாற்காலி நன்றாக முட்டு கொடுக்கப்பட்டது. அச்சமயம் வெளியில் ஒரு பெரிய வெடிச்சத்தம் கேட்டது. உடனே தொடர்ந்தாற்போல் இன்னொன்று கேட்டது. கப்பலின் மேல்தட்டில் ஏதோ பலமாக மோதியதுபோன்ற சத்தம் கேட்டது. அதோடு ஆட்கள் சபிக்கும் சத்தமும் கங்காதரனாகிய கப்பித்தான் மிக்க கோபத்தோடு இடும் கட்டளைகளும் சந்திராபாயின் செவிகளில் கேட்டன.

சந்திராபாயின் அறைக்குள்வர எண்ணிவந்த சீனக்காரன் அங்கிருந்த ஒரு கோடரியை யெடுத்து அதனால் கதவை யுடைக்கப் பலத்த முயற்சிசெய்தான். சந்திராபாய் அங்கிருந்த நாற்காலியோடு மேஜை, பலகையாசனம், இன்னும் என்னென்ன சாமான்கள் கைக்கு அகப்பட்டனவோ யாவற்றையும் எடுத்துக் கதவின் பின் அடைத்தாள்.

கதவோ வெளியிலிருக்கும் துஷ்டன் கோடரியாலடிப்பதால் துண்டு துண்டாகப் பிளந்து போகிறது. சந்திரா

பாய் பார்த்தாள். தன் ஜபம் சாய்வதாயில்லை. சீக்கிரத்தில் கதவு திறந்து கொள்ளும்போல் தெரிகிறது "ஓ அனாதரட்சகனே! நான் நிரபராதி. உம்மைவிட எனக்கு ஆதரவு ஒருவருமில்லை. என்னாலானதை நான் செய்கின்றேன். தாங்களே முடிவில் எனக்கு அடைக்கலஸ்தானம். தாங்களே இந்த அக்கிரமஸ்தர்களிடமிருந்து என்னைப் பாதுகாக்க வேண்டும் கருணாநிதியே" என்று துதித்தாள்.

இனித் தன்னால் செய்யத்தக்க முயற்சி யொன்றுமேயில்லை. என்னசெய்வாள்? அவள் அந்த அறையின் ஓரத்திலுள்ள வட்டமான துவாரத்தையும், அதிலிருந்து இரண்டொரு அடிகள் உயரத்திலிருக்கும் கப்பலின் மேல்தட்டையும் நோக்கினாள். அறையின் கதவு மறுவிநாடி திறந்து கொள்ளும்போல் தோன்றியது. இத்துஷ்டர்களிடம் சிக்கி மிக்க இம்சையையும் அவமானத்தையும் அனுபவிப்பதைக் காட்டிலும் நமது முயற்சியில் தவறி மடிந்தாலும் நலமே என்று அவள் புத்தியிற்பட்டது.

சந்திராபாய் உடனே கப்பலின் ஓரத்திலிருக்கும் வட்டமான துவாரத்திலேறி மேலே வெளிப்பக்கம் இருக்கும் மேல்தட்டின் கொடுங்கையைப் பற்றிக்கொண்டாள். அச்சமயம் கடவுள் அனுக்கிரகத்தால், பயத்தால் அவளுக்கு அபூர்வமான சக்தியும் தைரியமும் உண்டாயின. அவள் மேல்தட்டின் கொடுங்கையைப் பற்றிக்கொண்டு, அங்கிருந்து அதற்கு மேலிருந்த இரும்புக்கிராதியைப் பற்றிக்கொண்டு மேல்தட்டிற்கு ஏறிவிட்டாள்.

அதே விநாடி சந்திராபாய் கதவின் பின் முட்டுக் கொடுத்திருந்த சாமான்களனைத்தும் தடதடவென்று சாய்ந்து விழ்ந்ததும் கதவு படீர் என்று திறந்துகொண்டது. சந்திராபாயைக் கொன்றுவிடும் எண்ணங்கொண்டு ஆவே

சத்தோடு அறைக்குள் பாய்ந்த சீனக்காரன், அப்போது தான் அவள் கால்கள் மேலுக்குச் செல்வதை அறையின் ஓரத்திலிருந்த துவாரத்தின் வழியாகக்கண்டான். அத்துஷ்டன் மனம் தீப்பற்றி யெரிந்தது. அவன் துரிதமாய்த் திரும்பி மேல்தட்டிற்குச் செல்லும் படிகளை நோக்கி யோடினன்.

மேல்தட்டில் இருந்த குழப்பத்தால் சந்திராபாய் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமலே கிராதியைப் பற்றிக் கொண்டு மேல்தட்டில் போய்ச் சேர்ந்தாள். ஆனல் அங்கு நெடுநேரம் க்ஷேமமாக விருக்க முடியாதென்பதை யவள் அறிவாள்.

கங்காதரன் என்பவன் அவள் ஜாதியான். அந்தோ உலகில் மற்ற அபிமானங்களைப்போல் ஜாதியபிமானம் ஒரு பிரதான அபிமானமன்றோ? அதோடு அவன் அவள் நாட்டான். ஒரேதேசம் என்ற அபிமானமும் அவனுக்கு இருக்க வேண்டும். ஆபத்து நேரிடும்போது எப்படிப்பட்டவர்களும் இந்த அபிமானங்களை யுண்டென்று நம்புவது சுபாவமே. ஆகையால் சந்திராபாய் தனக்கிருக்கும் ஆபத்தில் கடைசியாக நமது நாட்டானும் ஜாதியானுமாகிய இவனுவது நமக்குச் சற்று உதவிசெய்ய மாட்டானு என்ற எண்ணத்தோடு, மேல்தட்டில் மாலுமிகளுக்குக் கப்பலை யதிவேகமாகச் செலுத்தும்படி கட்டளை யிட்டுக்கொண்டிருக்கும் கப்பித்தானுகிய கங்காதரனை நோக்கிச் சென்றுள்.

கங்காதரனுடைய முகம் குரூரமும் காண்போர்க்கு வெறுப்பை யுண்டாக்கத்தக்க பார்வையும் உடையதே ஆயினும் சந்திராபாய் பிராணுபத்தில் அவனிடம் அடைக்கலம் புக்க கருதிச்சென்றுள். அச்சமயந்தான் சந்திராபாயைக் கொல்லக்கருதி வந்த எமன்போன்ற அந்தச் சீனக்காரன்

மேல்தட்டில் வந்து பூனைபோல் அவளை நோக்கிச் சென்றான். அவன் வருவதைக்கண்ட சந்திராபாய்த் துரிதமாய் கங்கா தானருகில் நெருங்கி,

"அய்யா! என்னைக் காப்பாற்றும். நான் ஒரு குற்றமும் செய்யவில்லை" என்றாள்.

கங்காதானது ஒருகண் துரைத்தனப் படகின்மேலும் மற்றொரு கண் தன் கப்பல்மேலும் மாலுமிகள் மேலு மிருக்கின்றன. அவன் அப்போது தான் சந்திராபாயைக் கண்டான். அதுகாறும் அவளைக் கண்டதில்லை. அவள் தன் அருகில் வந்து அவ்வாறு கூறியதே "போ வழிவிட்டு. உன் வரையில் நீ தப்பித்துக்கொள்" என்று அப்புறம் தள்ளி விட்டான்.

சீனுக்கான் கத்தியை யுயரத் தூக்கிக்கொண்டு, அவளை நெருங்க முயன்றான். சந்திராபாய் ஓடினாள், சற்று தூரத்தில் மேல்செல்லும் ஒரு ஏணி யிருந்தது. அதன்மேல் ஏறினாள். இக்கப்பலைத் தூரத்திவரும் துரைத்தனப்படகில் பீரங்கி யிருப்பதால் அதிலிருந்து புறப்படும் குண்டுகள் கப்பலின் இரண்டு மூன்றிடங்களில் தாக்கின. சந்திராபாய் ஏணிமேலேறுவதைக்கண்ட சீனுக்கான் கத்தியை வாயில் கௌவிக்கொண்டு தானும் ஏறத்தொடங்கினான். குண்டு பட்டு ஏணியின் ஒரு குறுக்குச்சட்டம் தளர்ந்து விட்டிருந்தது. சந்திராபாய் அதைக்கழற்றித் தன்னைத் தொடர்ந்து வரும் துஷ்டன்மேல் விசிறி யடித்தாள்.

சீனுக்கான் முகத்தில்பட்ட அந்த அடியை வாங்கிக் கொண்ட பின்னும் அவன் ஏணிமேல் ஏறினான். சந்திராபாய் மேல் இருக்கும் இடத்தில் சேர்ந்துவிட்டாள். ஆனால் அதற்கப்பால் செல்ல விடமில்லை. சீனுக்கான் கையில் சிக்கிக்கொள்ள வேண்டியதே. சந்திராபாய் ஒரு விநாடியே

சிந்தித்தாள். பிறகு கப்பலின் உச்சியிலிருந்து தன் பலங் கொண்டமட்டும் தூரப்பாய்ந்து கடலில் குதித்து விட்டாள். சீனுக்காரனும் குதித்து நீந்திக்கொண்டே அவளைத் தூக்கிச் சென்றான்.

---

## 33-வது அத்தியாயம்.

துரைத்தனப்படகில் கப்பலைப்பிடிக்கச்செல்லும் காப்டென் பெரியநாயகம் அக்கப்பலை நிற்கும்படி சமிக்கை காட்டினான். ஆனால் கள்ளக்கப்பல் அச்சமிக்கையைச்சட்டை செய்யவில்லை. அதற்கு மாறாக அக்கப்பலின் உதவி எந்திரம் வேலைசெய்வது படகிலுள்ளவர்களுக்குக் கேட்டது.

பெரியநாயகம் உடனே ஒரு குண்டுவிட்டான். அப்போதும் அக்கப்பல் நிற்கவில்லை. நிற்பதற்கு மாறாக மேலேயுள்ள பாய்களும் விரிக்கப்பட்டதும் கப்பல் இன்னும் வேகமாய்ச் செல்லத் தொடங்கியது. உடனே படகிலிருந்து இன்னொரு குண்டு பறந்தது. படகும் அதிவேகமாய்ச் செல்லத் தொடங்கியது.

படகிலிருந்து புறப்பட்டகுண்டு கப்பலின் ஒரு கொடிமரத்தை யுடைத்துக்கொண்டு போய்விட்டது. படகிலிருந்து வீசப்பட்ட சோதனை வெளிச்சத்தால் அது நன்றாகத் தெரிந்தது படகு இப்போது வேகமாய்க் கப்பலை நெருங்கிக்கொண்டிருக்கிறது. அச்சமயம் சங்கரதாஸ் ஆத்திரத்தோடு,

"பெரியநாயகம்! உன் புண்ணியத்திற்குச் சுடுவதை நிறுத்து. அதோபார் கப்பலின்மேல்" என்று கரத்தால் சுட்டிக்காட்டினான். வரதாஸிங்கும் பெரியநாயகமும் அவன் காட்டிய குறிக்கு நேராக நோக்கினார்கள். அங்கு கப்பலில்

உச்சியில் ஓரத்தில் ஒரு கம்பியைப் பிடித்துக்கொண்டு சந்திராபாய் மிக்க ஆபத்தான நிலைமையில் நிற்கிறாள். அவள் ஒரு சீனாக்காரனைத் தன்னிடம் நெருங்கவொட்டாமல் தடுத்துக்கொண்டிருக்கிறாள் என்று தெரிந்தது.

அக்காட்சியைக் கண்டதே இவர்கள் மனம் பதைபதைத்துத் துடித்தது. இவர்கள் பிரமித்து நிற்கும்போதே சந்திராபாய் மிக்க துணிகரத்தோடு பாய்ந்து கடலில் குதித்ததையும் அந்தச் சீனாக்காரனும் கடலில் குதித்து நீந்திக்கொண்டு அவளைப் பிடிக்கப்போவதையும் கண்டார்கள்.

சங்கரதாஸ் "அந்தவிடத்திற்குப் படகை யதிவேகமாக விடுங்கள்" என்று கூறிவிட்டு பீரங்கியைத் தான் பிடித்துக்கொண்டு, அதைச் சந்திராபாயும் சீனாக்காரனும் இருக்குமிடத்திற்கு நேராகத்திருப்பி மிக்க ஜாக்கிரதையாகக் குறி பார்த்தான். சீனாக்காரன் பலசாலி. நன்றாய் நீந்தக்கூடியவன். அவன் வேகமாய்ச் செல்வதால் சந்திராபாயைப் பிடித்துக்கொள்வான் என்று தோன்றுகிறது. அவன் வாயில் பற்றிக்கொண்டிருக்கும் கத்தி சோதனை விளக்கின் பிரகாசத்தில் பளபளவென்று ஜொலிக்கிறது.

சங்கரதாஸ் மிக்க ஜாக்கிரதையாகக் குறி பார்த்தான். ஏனெனில் மயிரிழை தவறின் குண்டு சந்திராபாய்மேலேயே பட்டுவிடலாகும். சங்கரதாஸ் சிந்தித்தான்; அசேதகனாகிய ஒரு சீனக் கள்ளப்பயலின் கையால் கத்தியால் குத்துண்டு மரிப்பதைக் காட்டிலும், கடவுள் சித்தமிருந்தால் நமது கையாலேயே யவள் மடியப் பிரியப்படுவாள் என்று எண்ணிக்கொண்டு "கருணாநிதியாகிய பகவானே! நீயே கதி. நீயே நிரபராதியைக் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தித்ததும் பீரங்கியைச் சுட்டான்.

இன்னும் ஒரேநிமிடம் தாமதித்தால் சீனுக்காரன் சந்திராபாயை வெட்டி விடுவான். குண்டின் சத்தம் கடல் நீரின்மேல் பிரதித்தொனி யுண்டாக்கியது. அதேவினுடி சீனுக்காரன் இருகரங்களையும் உயரத்தூக்கி யுதறியதும் கடலில் அமிழ்ந்து விட்டான். பீரங்கிக்குண்டு சீனுக்காரனது பக்கவிலாவில் பாய்ந்தது.

அதேசமயம் கள்ளக்கப்பலின் கப்பித்தானுகிய ஸங்காதரன் தான் இணங்கிவிடுவதாய்ச் சமிக்கை காட்டினன். சங்காதாஸ் அதைக் கவனிக்காமல் முன்னே சந்திராபாய் இருக்குமிடத்திற்குச் சென்று அவளைப்பிடித்து படகில் ஏற்றிக்கொண்டு அவளுக்குத் தக்க உபசாரம்செய்து அவள் ஆயாசம், பயம், திகில் யாவற்றையும் நீக்க முயன்றுர்கள்.

இடையில் படகு துரிதமாய்ச்சென்று கப்பலை நெருங்கியதும் பெரியநாயகம் கட்டளையிட்டபடி கப்பல் கரையை நோக்கித் திரும்பியது. துறைமுகம் வந்து சேர்ந்ததும் கப்பித்தான் முதலியவர்கள் கைது செய்யப்பட்டார்கள். கப்பலும் பிடிக்கப்பட்டது. சுடப்பட்டு இறந்த சீனுக்காரன் சவம் மறுநாள் மாலை கரையில் கொண்டுவந்து ஒதுக்கப்பட்டது. கள்ளர்கள் கள்ளத்தனமாக அபினி கொண்டு வந்ததற்காக பிறகு தக்கபடி தண்டிக்கப்பட்டார்கள். அகப்பட்ட அபினியும் கப்பலும் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன. இக்கதையில் நமக்கு வேண்டியது சந்திராபாயின் விஷயமேயாதலின் அபினிக்கள்ளர் சங்கதியை விட்டு விட்டு நாம் சந்திராபாயின் விஷயங்களைக் கவனிப்போம்.

*　*　*　*

சந்திராபாய் துரைத்தனப்படகில் ஏற்றப்பட்டு அவள் ஆயாசம் நீங்கபதே, சங்காதாஸை நோக்கி, "ஓ! சங்காதாஸ்!'' என்றுள். சங்காதாஸ் "அத்தந்தியில்லா டெலி

போன் கருவியே உன்னைக் காப்பாற்றிற்று" என்றான். சந்திராபாய் அவன் முகத்தை யுற்று நோக்கி "இல்லை. அக் கருவியைக் கண்டு பிடித்தவரே யென்னைக் காப்பாற்றினார்" என்றாள்.

சந்திராபாயின் வீட்டில் அவள் அத்தை முதலியவர்கள் அவள் கிராமத்தில் ஒரு சிநேகிவீட்டிற்குச் சென்றிருக்கிறாளென்று நிம்மதியா யிருக்கிறார்கள். ஆகையால் அவள் சென்ற இரவே அவளும், சங்கரதாஸும், வரதாசிங்கும் ஒரு அன்னிய வண்டியில் திரும்பி வீட்டில் வந்து இறங்கியதைக் கண்டதே அவர்களுக்குண்டான வியப்பு கொஞ்சமல்ல. அதன்மேல் சந்திராபாய் கள்ளச்சாரதியாகிய சின்னப்பன் தன்னைக் கொண்டுபோய்ச் சீனாக்காரிடம் பிடித்துக் கொடுத்ததையும் தான் ஒரு கப்பலில் கொண்டு போகப்பட்டதையும், சங்கரதாஸ் அனுப்பிய டெலிபோன் கருவியின் மூலமாய் அவனுக்குச் சங்கதி யறிவித்ததையும், சங்கரதாஸ் தெய்வகதியாய்ச் சரியான உதவியோடு சமீபத்தில் இருக்க நேர்ந்து தன்னைக் காப்பாற்றியதையும் கூறியதே யாவரும் மிக்க வியப்பும் துயரமும் கடைசியில் சந்தோஷமு மடைந்தார்கள்.

* * * *

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த சில தினங்கள் கழித்து சந்திராபாய் சங்கரதாஸைக்காண இரசாயன சாலையறைக்குச் சென்றாள். அச்சமயம் சங்கரதாஸ் அங்குச் சுவரோரமாக விருந்த ஒரு நாற்காலியில் ஏதோ சோதனை வேலை செய்துகொண் டிருக்கிறான்.

அந்த நாற்காலியின் புயங்கள்மேல் குட்டையான கட்டும் இரும்புத்தகட்டாலாகிய பட்டைகளிருந்தன. அவை அந்த நாற்காலியில் யாரேனும் உட்கார்ந்தால் அவர்கள்

புயங்களை யப்படியே யதில் பிணித்துக் கட்டக்கூடியவை. சந்திராபாய் வந்ததும் அவளும் சங்கரதாஸனும் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் சந்திராபாய் அந்த நாற்காலியின் இடதுபுயத்தில் ஒரு உலோகப்பில்லை யமைக்கப்பட்டிருப்பதை நோக்கினாள். அப்பில்லை, நாற்காலியில் யாரேனும் உட்கார்ந்தால் அவர்கள் புயத்தோடு பொருத்திக் கட்டப்படக் கூடியவிதமாய் அங்கு அமைக்கப்பட்டிருந்தது.

சங்கரதாஸ் கடைசியாய் அந்நாற்காலியின் புயத்தின் கீழிருந்த இரண்டு மின்சாரக்கம்பிகளை அப்பில்லையில் பொருத்தினான். அக்கம்பிகள் நாற்காலியின் கால்களில் ஒன்றின் மூலமாய்ச்சென்று தரையிலிருந்த ஒரு துவாரத்தின் வழியாய் இரசாயன சாலை யறையின் பின்பக்க மிருக்கும் அறைக்குச் செல்லும்படி அமைக்கப்பட்டன.

யாவற்றையும் கண்ட சந்திராபாய் மிக்க வியப்படைந்து சங்கரதாஸை நோக்கி "இதென்ன இது? என் வரையில் இது ஒரு கொலைப்போன் - கொலை நாற்காலிபோல் காண்கிறது" என்றாள்.

சங்கரதாஸ் "ஆயினும் அவ்வளவு கெட்டதல்ல" என்று நகைத்துக்கொண்டே, கடியாரம்போன்று அளவுகள் குறிக்கப்பட்ட ஒரு வட்டமான கருவியையெடுத்து சந்திராபாய்க்குக்காட்டி, "இது ஒரு ஆளின் தேகத்திலுள்ள இரத்தம் அழுத்தப்படுவதன் மூலமாக அவர்களின் எண்ணங்கள் மனோ உணர்ச்சிகள் முதலியவற்றை யறிகிறது. இதோ இந்த நாற்காலியில் உட்கார்; நான் அதைக் காட்டுகிறேன்" என்றான்.

சந்திராபாய் அவ்வாறே யுட்கார்ந்தாள். அவள் அறிந்து கொள்ளுமுன் சங்கரதாஸ் அவள் புயங்களை மெதுவாக நாற்காலியிற் கட்டிவிட்டு அங்கு கம்பியில் பிணைக்கப்பட்

டிருந்த உலோகபில்லையைக் காத்தில் எடுத்துக்கொண்டு தான் நாற்காலியின் புயத்தின்மேல் உட்கார்ந்து அப்பில்லை யைக் காத்தில் பற்றிக்கொண்டான்.

சங்காதாஸ் மெதுவாய் சந்திராபாயின் புயத்தைப் பற்றிக்கொண்டு தன் கையிலிருக்கும் கடியாரம்போன்ற பில்லையை நோக்கினான். அதன்பிறகு அவன் சந்திராபாயை நோக்கி,

"உனக்கு நல்ல உறுதியானதும் சுகமானதுமாகிய இருதயம் இருக்கிறது" என்று ஒரு வைத்தியர் கூறும் உறுதியோடு கூறினான்.

சந்திராபாய் யாவும் பார்த்து மிக்க வியப்படைந்து புன்னகையோடு "போதும் போதும். என்னை இந்தக் கட்டிலிருந்து விடுவித்துவிடு. நீ யென் இருதயத்தைப் பற்றிக் கூறிய யாவும் உண்மையே" என்றாள். சங்காதாஸ் "ஆகா! மிக்க சந்தோஷத்தோடு செய்கிறேன்" என்றான்.

* * * *

வாதாஸிங் தான் தொழில்செய்யும் இடமாகிய "நட் சத்திரம்" பத்திரிகையின் காரியாலயத்திலிருந்து வீட்டிற் குச் சென்றுகொண்டிருக்கிறான். அவன் ஒரு வீதியின் வழி யாய்ச் செல்லும்போது அங்கு கொஞ்சம் ஜனநெருக்கம் இருந்தது. அதில் வாதாஸிங் ஒரு ஆளின் முகத்தைக் கண் டதும் அதை யுற்று நோக்கினான். ஏனெனில் அது ஒரு சீனக்காரனுடைய முகம். வாதாஸிங்கிக்கு அதை முன்பு எங்கோ பார்த்ததாகத் தெரிந்தது. ஆனால் அச்சமயம் எங்கு எப்போது பார்த்தோம் என்று நினைவிற்கு வாாவிடி னும் நமக்குத் தெரிந்த ஆசாமியேயென்று அவனுக்கு உறுதியாய்ப் புலப்பட்டது.

அவன் தன் முன்னே செல்லும்போது வாதாஸிங் சற்றுநோம் அவனை யுற்று நோக்கினான். உண்மையாகவே

அவன் விபாங்கன் ஆட்களில் ஒருவன் என்று வரதாஸிங்குக்குப் புலப்பட்டது. சரி நாம் இவனைத் தொடர்ந்து சென்று துப்பறியும் வேலையைச் செய்யவேண்டியதே யென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

இச்சம்பவம் நடக்கச் சற்று நேரத்திற்குமுன், கள்ளப் பயலாகிய விபாங்கன் தன் படுமோச காரியங்களை யெல்லாம் ஏற்பாடுசெய்து நடத்தும் அவனுடைய இரகசிய வாசஸ்தலத்திலுள்ள அறையில் சற்றும் ஆலசியம் செய்யாமல் மறுபடி வேறொரு வழியில் தன் வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் அநீதச்செயலை நடத்த முயற்சிசெய்துகொண்டிருக்கிறான். அவன் அச்சமயம் தன் கரத்தில் சுமார் முக்கால் அங்குல நீளமும், அரைக்கால் அங்குல குறுக்களவுமுள்ள ஒரு கண்ணாடிப்புட்டியைக் கரத்தில் வைத்துக் கொண்டிருக்கிறான். விரல்களுக்குத் தோலால் செய்த ஒரு விரற்சட்டை யணிந்து அக்கரத்தால் அப்புட்டியைப் பிடித்துக்கொண் டிருக்கிறான். அவன் முகத்தில் திருப்திகரமும் சந்தோஷமும் ஜொலிக்கின்றன.

விபாங்கன் பீதியோடும் மரியாதையோடும் அச்சிறு புட்டியைக் கரத்தில் பிடித்துக்கொண் டிருக்கிறான். ஏனெனில் சங்கரதாஸ் தன்னை யெப்படியாவது பிடிக்கவேண்டுமென்று செய்யும் முயற்சியை யடியோ டழித்துவிடத்தான் இப்போது புதிதாக ஒரு சூழ்ச்சி கண்டுபிடித்திருக்கிறான். அதைத் தடுக்க யாராலும் முடியாதென்பது அவன் எண்ணம்.

அந்தோ! மூடர்களாகிய அயோக்கியர்களெல்லாம் தங்கள் யுக்தியே சிறந்ததென்றும் ஒருவரும் அதைத் தடுத்துத் தமக்கு அபஜெய முண்டாக்க முடியாதென்றுமே எண்ணுவது வழக்கம். அவர்கள் கெட்ட எண்ணத்தோடு செய்யும்

சூழ்ச்சிகளிலும், தந்திரம், சூது, கபடம், கல்நெஞ்சம் முத லியவற்றிலும் எவ்வளவு கெட்டிக்காரராக விருப்பினும் அறி வின் பிரகாசமற்றவர்களே யாவர். மிருகங்களும் தங்கள் இரைகளைப் பற்றும்போது எவ்வளவோ ஜாக்கிரதையையும், முன் யோசனையையும், தந்திரத்தையும் காட்டுகின்றன. அதே குணங்கள் இவர்களுக்கு மிருக்கின்றன. அதோடு அவற்றைப்போலவே அறிவின் ஒளியில்லாததால் இவர்க ளும், நல்லது கெட்டது, நீதம் அநீதம், பாபம் புண்ணியம், ஜீவகாருண்யம் என்ற குணங்கள் சற்றுமின்றித் தங்கள் காரியசித்தி யொன்றையே கருதி நடக்கிறார்கள்.

இன்றேல் "சே! நாம் செய்யும் இக்காரியம் பாபத்தை யுண்டாக்கும் அநீதச்செயல். இதனால் அன்னியர்க்குத் துன்பம் நேரும்" என்று அறிந்து அதைச் செய்யாதொழி வர். ஆதலின் இத்தகையோர் மனிதரூபம் தாங்கிய மிருகங் களே யாவர். இக்காரணத்தால் விபாங்கன் தன் அக்கிரமச் செய்கைகளில் பன்முறை சங்கரதாஸுக்கு விரோதியாக வேலைசெய்து ஒவ்வொரு முறையிலும் தோல்வியும், அவமா னமு மடைந்து ஆபத்திலிருந்து சற்று தப்பியதோடு, தன் நம்பகமான ஆட்களில் சிலரை யிழந்தும், இன்னும் அவ னுக்கு அறிவு விளங்கவில்லை. இன்னமும் சங்கரதாஸுக் கும் நிரபராதியாகிய சந்திராபாய்க்கும் பெருந்தீங்கை-பிரா ணாபத்தையே விளைவிக்க ஆலோசனை செய்துகொண் டிருக் கிறான். மூடன். மூடன். முழுமூடன்.

விபாங்கன் தன் கரத்தில் வைத்திருக்கும் அச்சிறு புட் டியில் மிகக் கொஞ்சமான ஒருவிதத் தூள்போன்ற வஸ்து விருக்கின்றது. விபாங்கன் சற்றுநேரம் அதை யுற்று நோக் கியபின் தன் எதிரில் மேஜைமேலிருந்த ஒரு கைக்குட்டை யை யெடுத்தான். அக்குட்டையில் முன்னமே ஒரு சிறு

ஜேபிபோன்ற பைவைத்துத் தைக்கப்பட்டிருக்கிறது. விபாங்கன் அப்பையில் அப்புட்டியைச் சொருகிவிட்டு, மேஜைமேலிருந்த மணியை யடித்தான்.

இரண்டொரு விநாடிகளுக்குள் ஒரு சேவகக்காரன் அவன் எதிரில் வந்து நின்றான். அவன் எதிரில் நின்று காத்துக் கொண்டிருக்கையிலேயே விபாங்கன் ஒரு கடிதம் எழுதி அதை யொரு கடித உறையில் போட்டு அரக்குமுத்திரையிட்டான். அச்சிறு புட்டி இருக்கும் குட்டையைச்சுருட்டி, அதையொரு தகரக்குழாயில் போட்டு முத்திரை போட்டான். பிறகு இரண்டையும் அச்சேவகக்காரனிட மளித்து, "இவை யிரண்டையும் எடுத்துச்சென்று நாகம்மாளிடம் பத்திரமா யளிக்கவேண்டும். அவள் விலாசம் தெரியுமல்லவா?" என்றான். அவன், தெரியுமென்று அவ்வாறே சென்றான்.

வழியில் ஒரு சேவகக்காரனைக்கண்டு அவன் விபாங்கனுடைய ஆளென்றறிந்து வரதாஸிங் அவனைத் தொடர்ந்து சென்றான் என்று கூறினேனல்லவா? அவன்தான் இவன். அச்சேவகக்காரன் ஒரு சாதாரணமான வீட்டருகில் செல்லு மட்டும் வரதாஸிங் அவனைத் தொடர்ந்து சென்று அங்கு நின்றான். ஏனெனில் தன்னை யொருவன் பின்தொடர்ந்து வருவதை யுணராத அச்சேவகக்காரன் தாராளமாக அவ்வீட்டிற்குள் நுழைந்தான்.

வரதாஸிங் சுற்றுமுற்றும் பார்த்தான். தன்னை யொருவரும் பார்க்கவில்லையென்று தெரிந்ததும், மறுபடி யந்த வீட்டை நிச்சயமா யறிந்துகொள்வதற்காக அதன் முன்படிகளில் ஒன்றின்பக்கத்தில் ஒருவித அடையாளத்தைக் குறித்துவிட்டு எட்ட மறைவில் நின்றுகொண்டிருந்தான்.

அச்சமயம் வரதாஸிங் வெளியிலிருந்தபடியால் உள்ளே நடந்த சங்கதியை யவனறியக்கூடவில்லை. அவ்வீட்டிற்குள்

சென்ற சீனக்காரன் மேல்மாடியிற்சென்று அங்கிருந்த ஒரு கதவைத் தட்டினன். கிப்ஸிஜாதியைச் சேர்ந்தவள்போன்ற ஒரு ஆப்ரிகப் பெண் வந்து கதவைத்திறந்து யார் என்று கேட்டாள்.

சீனக்காரன் "நான் நாகம்மாளைக் காணவேண்டும். நான் அந்தம்மாளுக்கு ஒரு கடிதம் கொண்டுவந்திருக்கிறேன்" என்றான். அப்பெண் உள்ளே சென்று நாகம்மாளிடம் "அம்மா ஒரு சீனக்காரன் தங்களுக்கு ஏதோ கடிதம் கொண்டுவந்திருக்கிறன்" என்றாள்.

நாகம்மாள் "அப்படியாயின் அவனை யுள்ளேவரவிடு" என்றாள். வேலைக்காரி யுடனே சீனக்காரனை யழைத்துப் போய் நாகம்மாள் முன் விட்டாள். அவன் நாகம்மாளாகிய பெருங்கள்ளிக்கு வந்தனமளித்து விபாங்கன் கொடுத்த கடிதத்தையும் தகரக்குழையையும் அளித்தான்.

நாகம்மாள் கடிதத்தைப் பிரித்து வாசித்தாள். அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:—

"இக்கடிதத்துடன் அனுப்பப்பட்டிருப்பதை சந்திராபாயின் கண்கள்மேல் கட்டிவிடு. மூன்றுநிமிடங்கள்வரை கட்டிவைத்தால் போதும். கட்டாயம் ஒருவாரம் அல்லது பத்துநாட்களுக்குள் குருடியாய்ப்போவாள். அவள் அதைக் கட்டிக்கொள்ளச் செய்வதற்கு வேண்டிய தந்திரத்தை யுன் ஆலோசனைப்படியே செய்துகொள்."

நாகம்மாள் இதை வாசித்தபின் கடிதத்தோடுவந்த தகரக்குழாயைத் திறந்து அதிலிருக்கும் குட்டையை யெடுத்துப்பார்த்துத் தலையசைத்துவிட்டுக் கடிதம் கொண்டுவந்தவனை நோக்கி "நீ எஜமானிடம் போய் நான் அவர் கட்டளைப்படியே செய்துமுடிப்பதாகக் கூறு" என்றாள்.

---

## 34—வது அத்தியாயம்.

நாகம்மாள் விபாங்கனுக்குக் கூறும்படி சீனுக்காரனிடம் சங்கதிகூறி யனுப்பிவிட்டதும் பின்னுவிருக்கும் தன் அறைக்குள் சென்றாள். அங்குதான் அவளுடைய வேலைக்காரியாகிய சின்னாள் என்பவள் அவளுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறாள்.

நாகம்மாள் அங்குச் சென்றதும் ஒரு அலமாரியைத் திறந்து "இதோ சின்னாள் உனக்குச் சரியான கிப்ஸி யுடை முழுமையும் ஆயத்தம்செய்துவைத்திருக்கிறேன். மேலுடை தலையணி யாவும் சரியாயிருக்கின்றன. இப்போது நீ செய்ய வேண்டிய தென்ன தெரியுமா? அந்த சந்திராபாயிடம் சென்று தந்திரமாய் அவள் இதோ விருக்கிற இக்குட்டையைக் கண்களின்மேல் கட்டிக்கொள்ள ஒப்பும்படிச் செய்ய வேண்டும். குறிசொல்லும் சாமார்த்தியந்தான் உனக்கு நன்றாகத்தெரியும். அதைப்பற்றி நான் கூறவேண்டியதில்லை." என்று கூறித் தகரக்குழாயிலிருந்த குட்டையை யெடுத்துக் காட்டி அவளிட மளித்து, "இதை யவள் மூன்று நிமிட மேனும் கண்களின்மேல் கட்டிக்கொண் டிருக்கும்படி செய்யவேண்டும். இன்னும் சற்று அதிகநேரம் இருக்கச் செய்வதே நலம். தெரிகிறதா?" என்றாள்.

வீதியில் அவ்வீட்டின் எதிரில் நின்று பார்த்துக்கொண் டிருந்த வரதாவிங், உள்ளே நடந்த சங்கதிகளை யச்சமய மறியாவிடினும், நாம் இச்சங்கதிகளையெல்லாம் உடனே சங்கரதாஸனுக் கறிவிப்பது நலம் என்று அவன் புத்தியிற் பட்டது அவன் உடனே துரிதமாய் அருகிலிருந்த டெலிபோன் காரியாலயத்திற்குச் சென்று சங்கரதாஸனுக்குத்

தான் வழியில் ஒரு சீனுக்காரனைச் சந்தித்ததும், அவன் விபாங்கனுடைய ஆள் என்று உணர்ந்து அவனைத் தொடர்ந்துசென்று அவ்வீட்டில் அவன் நுழைவதைக் கண்டதும், அவ்வீட்டிற்கு அடையாளம் போட்டிருப்பதும் யாவும் அறிவித்தான். அப்போதுதான் சந்திராபாய் இரசாயன சாலையைவிட்டுத் தன்வீட்டிற்குத் திரும்பினாள்.

யாவும் கேட்ட சங்கரதாஸ் "மிக்க நல்லகாரியம் செய்தாய். அந்த வீட்டிற்குள் நுழைந்து அங்கு யார் இருக்கிறதென்று தெரிந்துகொள். நீ யவ்வீட்டிற்கு அடையாளம் வைத்ததைப்பற்றிச் சந்தோஷமடைகிறேன். நான் நேராய் அங்கு வருகிறேன்." என்று பதிலளித்தான்.

வரதாஸிங் "சந்தோஷம். நீ கூறியபடி நான் உள்ளே சென்று பார்க்கிறேன்" என்றான். வரதாஸிங் டெலிபோனிருக்குமிடத்தைவிட்டுப் புறப்பட்ட வேளையில் சங்கரதாஸும் தன் அறையைவிட்டு வரதாஸிங்கிடம் வரப் புறப்பட்டான்.

வரதாஸிங் அவ்வீட்டிற்குள் நுழைவதற்காகச் சென்றான். அங்கு நுழைவது மிக்க கஷ்டமென்றே அவன் எண்ணியிருந்தான். ஆனால் அவன் கதவைத் தட்டியதும் ஒரு கறுப்பு மாது வந்து கதவைத்திறந்ததே அவன் மிக்க வியப்படைந்தான். அவன் கதவைத் தட்டும்போதுதான் நாகம்மாள் சின்னிக்கு கிப்ஸி வேட உடைகளை யளித்து சந்திராபாயை யேமாற்றும் வழிகளை யுபதேசம் செய்து கொண்டிருக்கிறாள்.

கதவு தட்டப்பட்டதே நாகம்மாள் சின்னியை நோக்கி "அது யார் என்று போய்ப்பார்!" என்றாள். சின்னி அங்கிருந்து புறப்பட்டதே நாகம்மாள் அறையிலிருந்து வெளிப்பட்டு மறைவிலிருந்து பார்க்கத்தக்க ஒரு இடத்தில் வந்து நின்று நோக்கினாள்.

நாகம்மாள் அங்கு மறைவிலிருந்து பார்த்தாள். சின்னி அவனை யுள்ளே யழைத்துக்கொண்டு வருவதை யவள் கண்டதும் வியப்படைந்தாள். சின்னி அவனுக் கொரு நாற்காலி யெடுத்துப்போட்டு உட்காரச் சொன்னாள். வரதாஸிங், அந்த நாற்காலி வேணுமென்றே சுவரின் ஓரமாகக் குறித்த ஒருவிடத்தில் போடப்பட்டிருப்பதை யுணராமல், அதில் உட்கார்ந்துகொண்டான். அவன் அந்த இடமே நல்லதென் றெண்ணினான். ஏனெனில் அந்த விடத்திலிருந்து அவன் அறை முழுமையும் பார்க்கலாம்.

இதற்கிடையில் சின்னி அவன் வரவைப்பற்றி நாகம்மாளிடம் கூறச் சென்றாள். வரதாஸிங் உடனே தன் துப்பறியும் புத்தியோடு அறை முழுமையும் உற்று நோக்கினான். சரியாக யாவற்றையும் சோதிக்கலாம் என்று கருதினான்.

அப்போது அவன் கைகளி லணிந்திருந்த விரற்சட்டையொன்று நழுவிக் கீழே நாற்காலியின் காலினருகில் வீழ்ந்துவிட்டது. அவன் அதை யெடுக்கக் குனியக் கருதினான். ஆனால் அச்சமயம் யாரோ அறைக்குவரும் சத்தம் கேட்டதால் சும்மாவிருந்தான். மறுவிநாடி நாகம்மாள் அலறக்குள் வந்தாள்.

அவள் வரவைக் கண்டதும் வரதாஸிங் ஆசாரப்படி எழுந்து நின்றான். அக்கள்ளி மிக்க மரியாதையோடு "தாங்கள் உட்காருங்கள். என்னகாரணமாகத் தாங்கள் இங்கு வரும் பாக்கியம் நான் பெற்றதோ?" என்றாள்.

தன்னை யவள் அறிவாளென்று வரதாஸிங்குக்குத் தெரியும். ஆனால் அச்சமயம் அவள் முகத்தில் எள்ளளவு பீதியாவது கலவரமாவது புலப்படவில்லை. அதனால் வரதாஸிங் மறுபடி அந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு "ஒரு சமயம் நாம் முன்பு சந்தித்த சந்தர்ப்பத்தை நீ கருது கிறாயாக்கும்" என்றான்.

அச்சமயம் அககள்ளி எதிரிலிருந்த மேஜை யருகில் நின்று கொண்டு அவன் கூறுவதைக் கவனிப்பவள்போல் காணப்பட்டாள். அவள் கரம் மேஜையின் ஓரத்தின்மேல் வைக்கப்பட்டது மட்டுமே தெரிந்தது. அவள் முகத்தைப் பார்த்துக்கொண் டிருந்த வரதாஸிங் அதைக் கவனிக்க வில்லை. திடீலென்று அவன் நாற்காலிக்குப்பின் நேராகச் சுவரில் மறைந்திருந்த ஒரு இரும்புச்சட்டம் வேகமாகச் சாய்ந்து அவன் சிரசின்மேல் மோதியடித்ததும் அவன் ஸ்ம ரணையிழந்து வீழ்ந்துவிட்டான்.

நாகம்மாளும் அவள் ஆள்காரியாகிய சின்னியும் அவ னைத் தூக்கிக்கொண்டுபோய் பின்னுலிருந்த ஒரு அறையில் போட்டு விட்டார்கள். சின்னி யுடனே ஆயத்தமாய்த் தன் கிப்ஸி யுடையை யணிந்துகொண்டாள்.

நேயர்கள் இச்சமயத்தில் அவர்களுடைய ஆசாரத்தை-அனுசாரத்தைக் - கவனிக்கக் கோருகிறேம். பெண்களைக் கண்டபோது ஆடவர் தம் ஆசனத்தைவிட்டு எழுந்திருந்து நிற்கவேண்டுமாம். இது பெண்களிடத்து அன்பு காட்டும் ஆசாரமாகுமோ? ஒருகாலுமில்லை. உலகாயத மதப்படி உலக போகமே மனிதன் பிரத்தியட்சத்தில் அனுபவிக்கும்போகம். அத்தகைய போகங்களில் ஸ்திரீ சுகமே யாவற்றினும் சிரேஷ்டமானது. ஸ்திரீகளைப் பெண் தெய்வமென்று கருது வது அவர்கள் மதம். அவர்களிடத் தனுபவிக்கப்படும் மிருக சுகத்திற்காகவே அவர்களுக்கு அத்தகைய மரியாதை காட்டுவதன்றி மற்றப்படி அவர்களுடைய பாரமார்த்தீக க்ஷேமத்தைப்பற்றிச் சற்றும் அவர்கள் கருதுவதில்லை. இதில் அவர்கள் செல்லும் ஆபாச வழிகளைக்கூற இங்கு இடமில்லை. ஒரு ஸ்திரீ தன் கணவன் முகத்திற்குமுன் "நான்...என்பவர்மேல் பூரணக்காதல் கொண்டிருக் கிறேன்

இப்போது உன்னை மணம்புரிந்து கொண்டதால் அவரைச் சிநேகனாகப் பாவித்து வருகிறேன். நாளைக்கு அவர் என்னைக் காணவருகிறார்" என்றால் புருடன் அதற்குச் சம்மதிக்கவேண்டும். அந்தோ! மிருகங்கள்கூட இத்தகைய விஷயத்திற்கு இடங்கொடா. இதைப்பற்றி அதிகம்கூற இடமில்லை. நம் நாட்டிலுள்ளவர்களில் மேல்நாட்டு நாகரீகப் பித்தேறிய மூடர்களில் சிலர் இன்னும் நம் மாதர்க்கு மேல் நாட்டாரைப்போல் எல்லா விஷயங்களிலும் பூரண சுயாதீனமளிக்க வேண்டுமென்று கூறி, "தான் கெட்ட குரங்கு வனத்தையும் கெடுத்தது" என்ற பழமொழிபோல் நம் பாரத நாட்டையே கெடுக்க முயல்கிறார்கள். ஆனால் அவர்கள் இப்படி நடப்பதுதான் கௌரவம் என்று கருதுகிறார்களே யன்றி இதனாலுண்டாகும் அழிவையும், இதனால் நம் பெண்மணிகளுக்கு நாமே பெருந்தீங் கிழைக்கிறோம் என்பதையும் உணர்கிறார்களில்லை. பேய் வாய்ப்பட்டவனுக்கு புத்தி தெளிவு எங்ஙனமுண்டாம்?

* * * *

நாகம்மாள் மேஜையின் ஓரத்திலிருந்த ஒரு பொத்தானை யழுத்தியதே சுவரில் வைத்திருந்த சூத்திர இரும்புச் சட்டம் முன் சாய்ந்து மோதி யடித்தது. அதற்கு நேராக வாதாஸிங் உட்கார்ந்திருந்ததால் அந்த அடி அவன் மண்டைமேல் வீழ்ந்தது,

இச் சம்பவம் நடந்த ஐந்து நிமிடங்களுக் கெல்லாம் சங்கரதாஸ் அந்த வீட்டின்முன் வந்து நின்றான். அங்கு வாதாஸிங் வைத்த அடையாளத்தைக் கண்டான். அவன் உள்ளே நுழைவதென்று தீர்மானித்தான். அச்சமயம் ஒரு சத்தம் அவன் செவியில் வீழ்ந்தது. அப்போது தான் நாகம்மாள் சின்னிக்குக் கடைசியான உபதேசங்களைக் கூறி

யவளை வெளியில் அனுப்பப்போகிறுள். அச்சத்தமே சங்காதாஸுக்குக் கேட்டது. ஆகலின் அவன் சட்டென்று அருகிலிருந்த ஒரு விடத்தில் மறைந்துகொண்டான்.

சங்கரதாஸ் சாதாரணமான ஒரு கிப்ஸிப்பெண் வெளியில் செல்வதைக் கண்டான். அவன் இரண்டொரு விநாடி அவள் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்த பின் உள்ளே செல்லத் துணிந்து மணியடிக்கும் கயிற்றைப்பற்றி யிழுத்தான்.

வரதாஸிங் இன்னும் ஸ்மரணையின்றியே கிடக்கிறுன். நாகம்மாள் அவன் அருகில்நின்று அவனை நோக்கிக்கொண்டிருக்கிறுள். அப்போதுதான் மணியடிக்கும் சத்தம் கேட்டது. அவள் உடனே தைரியத்தோடு அங்கிருந்த ஒரு போர்வையை யெடுத்து வரதாஸிங்கின்மேல் போர்த்து அவனை மூடி மறைத்துவிட்டுச் சென்று கதவைத்திறந்தாள்.

சங்கரதாஸ் முன்னிருந்த அறைக்கு வந்ததும் நாகம்மாள் காட்டியபடி வரதாஸிங் உட்கார்ந்த அதே நாற்காலியில் தற்செயலாய் உட்கார்ந்தான். அவள் சங்கரதாஸை யறிந்துகொண்டதும் மூச்சு திணறியது. அவள் பயத்தோடு பிரமிப்படைந்தாள். ஆயினும் மிக்க சாமார்த்தியமாய் தன் உணர்ச்சிகளையெல்லாம் மறைத்துக்கொண்டாள்.

சங்காதாஸோ அவள் முகத்தையே நோக்கிக்கொண்டிருந்ததால் வெளிக்கு அவள் கலக்கமற்றவள்போல் தோன்றினும், உள்ளே யவள் மனதில் மிக்க கலவரமும் திகிலுமிருக்கின்றனவென்று கண்டுகொண்டான்.

சங்கரதாஸ் அவளை யங்கு கண்டதே இந்த இடம் விபாங்கனுடைய உளவாளிக ளிருக்குமிடமென்றும் சந்திராபாய்க்குத் தீங்குச் செய்யும் விஷயங்களில் இங்குள்ள

வர்கள் உளவாகவும் உதவியாகவு மிருப்போர்களென்றும் உடனே யுணர்ந்து கொண்டான். அதிலும் நாகம்மாள் என்ற அக்கள்ளியைப்பற்றி யவன் நன்ருக அறிவான். அச் சங்கதி அவளுக்கும் தெரியும். சங்காதாஸ் இப்படிப்பட்ட துஷ்டி மறுபடி நம்மிடம் சிக்கிக்கொண்டாள் என்று சந் தோஷமடைந்தான். ஆனுல் தான் உட்கார்ந்திருக்கும் நாற் காலியில் தனக்கு எத்தகைய ஆபத்துண்டாகு மென்று அவன் அறியான். தன்னை யறியாமலே நீதியின் பக்கம் உதவி புரியும் பரம கருணுநிதியாகிய பகவான் தனக்கு உதவியா யிருக்கிருரென்றும் அவனுக்குத் தெரியாது.

அவன் நாகம்மாள்தான் இங்கிருப்பவள் என்று அறிந் ததே அந்த நாற்காலியில் உட்கார்ந்தபடி அவளை நோக்கி "நீ என்னை இவ்வளவு சீக்கிரத்தில் மறுபடி சந்திப்பாய் என்று கருதவில்லை யல்லவா?" என்ருன்.

நாகம்மாள் பதில் கூருமலே எழுந்து மேஜையின் அரு கிற்சென்று அதன் ஓரத்தைத் தடவினுள். சங்கரதாஸ் அதைக் கவனித்தான். ஆயினும் அவன் தான் உட்கார்ந்தி ருக்கும் நாற்காலியை யப்புறம் நகர்த்தவுமில்லை. அதைவிட் டெழுந்திருக்கவுமில்லை. அந்தோ! அந்த நாற்காலியின் வஞ் சம் அவனுக்குத் தெரியாது.

ஆனுல் எங்கும் இருந்து யாவற்றையும் பார்த்துக்கொண் டிருக்கும் பரம கருணுநிதியாகிய நியாயாதிபதி யொருவர் இருக்கிருரன்ருே? அவர் கருணையால் அச்சமயம் தான் உட்கார்ந்திருக்கும நாற்காலியின் ஓரத்தில் ஒரு விற்சட்டை விழுந்து கிடப்பது அவன் கண்களுக்குப் புலப்பட்டது. அதோடு அது தன் நண்பனுகிய வரதாஸிங் அணிந்திருந்தது போல் தோன்றியது.

ஆகையால் சங்கரதாஸ் அதை யெடுக்கக் கீழ் நோக்கி முன்னுக்குக் குனிந்தான். அதே விநாடி நாகம்மாள் மேஜை யோரத்திலிருக்கும் பொத்தானை யழுத்தினாள். உடனே சுவரிலிருந்த இரும்புச் சட்டம் வெளியில் பாய்ந்தடித்தது. ஆனால் சங்கரதாஸ் அச்சமயம் குனிந்தபடி யிருந்ததால் அது அவன் சிரம் இருந்த இடத்திற்கு நேராய் வெட்ட வெளியையே யடித்தது.

தன் காரியம் பலிக்காமற் போய்விட்டதைக் கண்டதே நாகம்மாள் மிக்க பீதியும் திகிலுமடைந்து கதவைத் திறந்து கொண்டு வெளியில் ஓடப்போனாள். ஆனால் சங்கரதாஸ் ஒரு பாய்ச்சலாகப் பாய்ந்துபோய் அவளைப் பிடித்துக்கொண்டு "கள்ளியே! அவ்வளவு அவசரம்வேண்டாம். சற்றுபொறு" என்று கூறிக் கீழிருந்து அகப்பட்ட அந்த விரற்சட்டையைச் சற்று உற்று நோக்கினான்.

* * * * *

சங்கரதாஸின் இரசாயனச் சாலையை விட்டுச் சென்ற சந்திராபாய் தன் வீட்டிற்குச் சென்று உடைகளைக் களைந்து சாதாரண உடையணிந்துகொண்ட பின் புஷ்பச் செடிகள் இருக்குமிடத்திற்குச் சென்று அவற்றைச் சுத்தம் செய்து கொண்டும் ஒவ்வொரு மலர்களைப் பறித்துக் கொண்டு மிருந்தாள்.

தோட்டத்தி லிருக்கும் சந்திராபாய் அதன் பக்கத்தி லிருக்கும் பாதை வழியாய் ஒரு கிப்ஸி செல்வதைக் கண்டாள். அவளும் இவளைக் கண்டு மிக்க வணக்கத்தோடு வந்தனமளித்து, "சீமாட்டியே! தயைசெய்து உன் நல்லதிஷ்டத்தைக் கூற எனக்கு அனுமதி யளித்தால் நான் மிக்க பாக்கியம் பெற்றவளாவேன்" என்றாள்.

சந்திராபாய்:—"நான் நீங்கள் சொல்லும் குறிகளை நம்புகிறவளல்ல. ஆயினும் நீ யென்ன கூறுகிறாய் என்று

பார்க்க விரும்புகிறேன். வாவுள்ளே" என்று கூறி அவளை யழைத்துச் சென்றாள்.

இத்தகைய நடவடிக்கைகளுக்காகத்தான் "பெண் புத்தி பின்புத்தியே" என்பது. "நீங்கள் கூறும் குறிகளில் எனக்கு நம்பிக்கை யில்லை" என்று கூறியவள் "ஆகையால் நீ போ. உன் குறி எனக்கு வேண்டாம்" என்றியம்பி விட்டிருக்கலா மன்றோ. பெண்கள் புத்தி யப்படி யில்லை. அவர்கள் தேக பலம் மனோபலம் இரண்டிலும் ஆடவர்க்குத் தாழ்ந்தவர்களே. அதனாற்றான் அவர்கள் எப்போதும் ஆடவர்களாலேயே காப்பாற்றப்படவேண்டும் என்று திரிகாலக்கியானிகளாகிய நம் முன்னோர் தக்கவிதி யமைத்தனர்.

சந்திராபாய் தோட்டத்திலிருந்த ஒரு ஆசனத்தில் அந்தக் கிப்ஸியை யழைத்துப்போய் உட்காரவைத்துத் தானும் உட்கார்ந்தாள். அச்சமயம் சந்திராபாயின் அத்தையாகிய ஜானகி யம்மாள் தற்செயலாக அங்கு வந்தாள். அவள் அங்கிருக்கும் கிப்ஸியைக் கண்டதும், அச்சாதியார் நல்ல அந்தஸ்தி லிருப்பவர்கள் விஷயங்களை விசாரித் தறிந்து வந்து அவர்களுக்குக் குறி சொல்வதுபோல் அபிநயித்துப் பொருள் பறிப்பவர்கள் என்று தெரிந் திருப்பவளாதலால் சந்திராபாயை நோக்கி "என்ன சமாசாரம்? இவள் யார்?" என்று வினவினாள்.

சந்திராபாய் "அத்தை! நான் இம்மாதிடம் என் அதிஷ்டத்தையறிய விரும்புகிறேன். நீயும் உன் அதிர்ட்டத்தை யறிய விரும்புகிறாயா?" என்றாள். ஜானகியம்மாள் புன்னகையோடு "நீ யின்னும் உலக அனுபவ மறியாப் பெண். பார் பார் உன் அதிஷ்டத்தை யறிந்துகொள்" என்றாள்.

அதன்மேல் சந்திராபாய் அக்கள்ளக் கிப்ஸியின் எதிரில் அங்கிருந்த ஆசனத்தில் உட்கார்ந்தாள். கிப்ஸி சந்திராபாயின் காத்தைப்பற்றி உள்ளங்கையைப் பார்த்துக்

கொண்டே, அதிலுள்ள இரேகைகளைப் பார்த்தே யாவும் கூறுபவள் போல் கூறத் தொடங்கினாள்.

கள்ளக் கிப்ஸியாகிய சின்னிக்குத் தான் நாகம்மாள் விபாங்கன் இவர்கள் மூலமாக சந்திராபாயின் இறந்தகால விவகாரங்க ளனைத்தும் நன்றாகப் பாடமாய்விட்டிருக்கிறது. ஆகையால் நடந்த சில விஷயங்களைக் குறிசொல்பவள்போல் சொல்லியதைக் கேட்டதே, சந்திராபாய்க்கும் அவள் அத்தைக்கும் அவள் குறிசொல்வதில் மனம் மயங்கிவிட்டது.

கிப்ஸியாகிய கள்ளி அவள் மன நிலைமையை யுணர்ந்து "இப்போது எதிர்காலத்தைக் கூறுகிறேன். கிழக்கு நாட்டு மனிதன் ஒருவன் உன்மேல் கொடிய பகை வைத்திருக்கிறான். அவன் மஞ்சள் நிறமுடையவன். முன்னமே அவன் உனக்குப் பன்முறை பெரிய ஆபத்தை யுண்டாக்கி யிருக்கிறான். ஆனாலும் நீ தெய்வகடாட்சத்தால் உன் ஜாதிமனிதர் ஒருவர் இருவர் உதவியால் அத்தகைய ஆபத்துகள் எல்லாவற்றினின்றும் தப்பித்துக் கொண்டாய். கடைசிவரையில் உனக்குத் தெய்வம் உதவி யிருக்கும். ஆயினும் அந்தக் கிழக்குநாட்டு மனிதன் மிக்க அபாயகரமானவன்" என்றாள்.

இப்போது அவள் முன்னம் கூறிய விஷயங்களாலேயே சந்திராபாயும் அவள் அத்தையும் மயங்கிவிட்டார்கள். இப்போது அவள் ஜாடையாகக் கூறிய சங்கதிகளால் அவள் குறிப்பிடும் ஆள் விபாங்கனே யென்று அவர்கள் மனதிற் பட்டது. அதனால் அவள் விஷயத்தில் அவர்களுக்குப் பூரண நம்பிக்கை யுண்டாகிவிட்டது. அதனால் மிக்க வியப்போடு அவள் முகத்தை நோக்கினார்கள்.

---

# 35 - வது அத்தியாயம்

இப்ஸிலேட மணிந்து வந்த கள்ளியாகிய சின்னி—நாகம்மாளாகிய பெரிய கள்ளியின் தோழி—சந்திராபாயும் அவள் அத்தையாகிய மூதாட்டியும் தன் மாயத்தால் பூரணமாக மயங்கிவிட்டார்கள் என்பதை யறிந்து கொண்டாள்.

அதன்மேல் அவள் சந்திராபாயை நோக்கி,

"சீமாட்டியே! இதுகாறும் நான் கூறியவற்றிற் கெல்லாம் ஒரு பிரத்தியட்ச அத்தாட்சியுமில்லை. இப்போது உனக்குப் பிரியமாயின் நான் உன் கொடிய விரோதியென்று கூறிய ஆள் யாரென்பதை நீயே யிங்கேயே உன் கண்களால் காணச் செய்கிறேன். அதாவது அவன் உருவம் உன் கண்களுக்குப் புலப்படச் செய்கிறேன்'' என்றாள்.

அவ்வாறு கூறிவிட்டு சந்திராபாய்க்கு ஏதோ பெரிய நன்மை செய்கிறவள்போல் கண்களைச் சிமிட்டிவிட்டுத் தன் மடியிலிருந்து அத்தகைக் குழாயை யெடுத்து அதிலிருந்த குட்டையை வெளியிலெடுத்தாள். அவள் சந்திராபாயை நோக்கி "இதோ இதை யுன் கண்கள்மேல் கட்டிக்கொள்ள வேண்டும். காட்டுகிறேன் பார்'' என்றாள்.

சந்திராபாய் அச்சமயம் தன் கைக்குட்டையைக் காதில் வைத்துக்கொண்டிருந்தாள். அவள் நிமிர்ந்து உட்கார்ந்ததும் கிப்ஸி தன் கையிலிருந்த குட்டையை 'யவள் கண்களின்மேல் கட்டி "நான் உன்மனதிற்கு வழிகாட்டுகிறேன்'' என்று கூறித் தன் கண்களையும் கட்டிக்கொண்டாள். ஆனால் தன் வரையில் பார்க்கும்படி செய்துகொண்டாள்.

இரண்டொரு விநாடிகள் கழித்து சந்திராபாயை நோக்கி "உன் கண்களுக்கு ஏதேனும் புலப்படுகின்றதா?" என்றாள்.

சந்திராபாய் இல்லையென்றாள். அக் கள்ளியாகிய சின்னி "நீ இந்த அறையையும் மற்ற விஷயங்களையும் மறந்துவிட்டுக் காலியான மனதோடு நோக்கு. அப்போது உன் கொடிய எதிரியின் உருவம் உன் கண்களின் முன் தெரியும். காலம் செல்வதையும் மறந்துவிடு" என்றாள்.

இங்கு இச்சம்பவம் நடக்கையில் வேறிடத்தில் நடக்கும் விஷயத்தைக் கூறுவாம்.

* * * *

நாகம்மாள் வீட்டிற்குள் சென்றிருக்கும் சங்கரதாஸ் தான் உட்கார்ந்திருந்த நாற்காலியில் கீழிருந்த கைச்சட்டையை யெடுத்துப்பார்த்ததும் அது வரதாஸிங்குடையதென்று தெரிந்துகொண்டான். வரதாஸிங் அங்கிருக்கிறான் என்ற நம்பிக்கையோடேயே அவன் அங்கு வந்தான் ஆதலால், சுவரிலிருந்து இரும்புச்சட்டம் வெளிவந்து தாக்கியதை யிதோடு சம்பந்தப்படுத்தியபோது வரதாஸிங் இந்த ஆபத்தில்தான் சிக்கிக்கொண்டிருக்கவேண்டுமென்று அவன் புத்தியிற்பட்டது. உடனே அவன் மனம் தீப்பற்றியெரிந்தது. தன் நண்பனைக் கண்டுபிடிக்க வேண்டுமேயென்ற எண்ணத்தால் தன் கோபத்தை யடிக்கிக்கொண்டானே யன்றி மற்றப்படி யவளை யங்கேயே யப்போதே விண்ணுலகிற் குடியேற்றி விட்டிருப்பான்.

சங்கரதாஸ் ஆலகால ருத்திரன் போல் அக்கள்ளியை நோக்கி,

"ஒ பெண்பேயே! எங்கே வாதாஸிங் ?" என்றான். அதைக் கேட்டதே அவள் இடிவிழுந்தவள்போல் உளம் நடுங்கினாளெனினும், பீதியனைத்தும் அடக்கிக்கொண்டு "எனக்குத் தெரியாது" என்றாள்.

சங்கரதாஸ் பாய்ந்தெழுந்து அவள் தோளைப் பற்றிக்கொண்டு "உனக்குத் தெரியும். அவனைக் காட்டாவிடின் இப்போதே செத்தாய். நட அவன் இருக்கு மிடத்திற்கு ! சீக்கிரம் !" என்றான். அவள் நடுக்கத்தோடு பேசாமல் வாதாஸிங் இருக்குமறைக்குச் சென்றாள். அந்த அறைக்குள் நுழைந்ததும் வாதாஸிங்கின்மேல் போர்த்திருந்த போர்வையிலிருந்து அவன் பாதங்கள் வெளிவந்திருந்தன. சங்கரதாஸ் அக்காட்சியைக் கண்டதும் போர்வையையெடுத்துவிட்டு நாகம்மாளை நோக்கி "சண்டாளக் கழுதை! இதற்காக உன்னை என்ன செய்யப்........" என்பதற்குள் அங்கிருந்த டெலிபோன்மணி யடித்தது.

நாகம்மாள் பேசுவதற்காக அதை நோக்கிச் சென்றாள். சங்கரதாஸ் "சீ கழுதை செல்லாதே" என்று அவளை இழுத்து அப்புறம் தள்ளிவிட்டு 'நான் போய் அது என்ன சமாசாரம் என்று அறிகிறேன்" என்று டெலிபோனருகில் சென்று வினவினான்.

டெலிபோனில் பேசமுயன்றவன் விபாங்கன். அவன் தன் ஆளை நாகம்மாளிடம் அனுப்பிய சற்றுநேரங் கழித்துத் தான் கட்டளையிட்டப்படி யவள் யாவும் சரியாகச் செய்தாளாவென்று கேட்டறிவதற்காக அவளைக் கூப்பிட்டான். ஆனால் பதிலுக்கு யாரோ ஆடவன் குரல் யார் என்று கேட்பதை யறிந்ததும் சந்தேகங்கொண்டு பேசாமலிருந்துவிட்டான். பதிலே யளிக்கவில்லை.

இரண்டு மூன்று முறை கூப்பிட்டும் பதில்வரவில்லை. சங்கரதாஸ் "பேஷ், இது மிக்க வியப்பே" என்று கூறிவிட்டு

186535
சென்னை-600 0..

நாகம்மாளை நோக்கி "உன் முகம் மிக்க அபூர்வமான மாதிரி யாயிருக்கிறது. நீ யுன் மனவுணர்ச்சிகளை யெல்லாம் இப் படி யடக்கிக்கொண் டிருப்பது கள்ளியாகிய உன் பெரிய சாமர்த்தியமே. ஆயினும் இச்சமாசாரம் உன் எஜமானுகிய விபாங்கனிட மிருந்து வந்ததென்று நான் நம்புகிறேன். எப் படியாயினும் அந்த உண்மையை யறிந்துகொள்வேன்" என்று கூறிவிட்டு டெலிபோன் காரியாலயத்தை எந்த எண் டெலிபோனிலிருந்து சமாசாரம் வந்தது என்று கேட்டான்.

அங்கு வேலை செய்யும் பெண் புதியவள். அவள் "நான் எண்ணை மறந்துவிட்டேன். அது சீனுக்காரர் வசிக்கும் பிரதேசத்தில் பெரும்பாலும் பாலைத்தெருவி லிருந்து வந் திருக்கும்" என்ருள். சங்கரதாஸ் உடனே உண்மை யறிந்து கொண்டான். சங்கரதாஸ் உனக்கு வந்தனம் என்று கூறிவிட்டு பேசும் குழலை டெலிபோனில் மாட்டிவிட்டுத் திரும்பினுன்.

அச்சமயம் நாகம்மாள் தன் ஜேபியிலிருந்து ஏதோ ஒரு கடிதத்தை யெடுத்துக் கசக்கி யழித்துவிட முயல்கிற தைக் கண்டதும் புலிபோல் பாய்ந்துபோய் அவள் காத்தி லிருந்த கடிதத்தைப் பிடுங்கிக்கொண்டான். அவள் சுலபத் தில் அதைக் கைவிட்டிராள். சங்கரதாஸ் அவள் கணுக்கை யைப் பிடித்தபிடியால் அவள் ஒன்றும் செய்யமுடியாமல் கடிதத்தைக் கீழே நழுவவிட்டாள்.

சங்கரதாஸ் அதையெடுத்து வாசித்தான். அதில் "இதோடு அனுப்பப்பட்டிருக்கும் குட்டையை யவள் கண் களின்மேல் கட்டிவிடு. அவள் சீக்கிரத்தில் கண் குருடாகி விடுவாள்" என்ற கருத்தடங்கிய சங்கதி வரையப்பட்டிருப் பதைக் கண்டான்.

சங்கரதாஸ் அக்கடிதத்தை வாசித்ததும் மிக்க ஆவே சத்தோடு நாகம்மாள் என்ற கள்ளியின் முகத்தை நோக்கி

னன். அக்கடிதத்தைப் பார்த்ததும் அவன் மனம் துரிதமாக வேலைசெய்யத் தொடங்கியது. இக்கடிதத்தில் குறிக்கப்பட்டது சந்திராபாயாகவே யிருக்க வேண்டுமென்று அவன் புத்தியிற்பட்டது. ஆனால் அவளைக் குருடாகச் செய்வது எதுவாயிருக்கலாம் என்று சிந்தித்தான். மறு விநாடியவனுக்கு உண்மை புலப்பட்டு விட்டது.

சங்கரதாஸ் உடனே அங்கிருந்த டெலிபோனில் சந்திராபாயின் டெலிபோன் எண்ணைக் கூப்பிட்டான்.

*　　*　　*　　*

தன் வீட்டில் கிப்ஸி வேடமணிந்த சின்னியின் முன் கண்கள் கட்டப்பட்டு உட்கார்ந்திருக்கும் சந்திராபாய் சில விநாடிகள் வரையில் பார்த்தாள். அவள் கண்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை.

சங்கரதாஸ் டெலிபோனில் சந்திராபாயைக் கூப்பிட்டான். அச்சமயம் ஜானகியம்மாள் சந்திராபாயையும் அந்த கிப்ஸியையும் வேடிக்கையாய் உற்று நோக்கியபடி யிருந்தாள்.

அச்சமயம் ஜெகநாதன் அவர்கள் இருக்கும் அறைக்கு வந்து சந்திராபாயை நோக்கி "சங்கரதாஸ் உன்னை டெலிபோனில் கூப்பிடுகிறார்." என்று கூறினன். சந்திராபாய் தன் அத்தையை நோக்கி "அத்தை! நீ போய் பதில் கூறுகிறாயா? நான் இரண்டொரு நிமிடங்களில் வருவதாய்க் கூறு" என்றாள்.

ஜானகியம்மாள் உடனே ஜெகநாதனோடு டெலிபோனிருக்கும் அறைக்குச்சென்று பேசும் குழலை யெடுத்து யார் என்று கேட்டாள். "சந்திராபாய்! நீதானா பேசுவது" என்று பதில் வந்தது.

ஜானகியம்மாள் "சந்திராபாய் தோட்டத்தில் இருக்கிறாள். யாரோ ஒரு கிப்ஸி வந்திருக்கிறாள். இருவரும் இரண்டு மங்கிகள்போல் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டிருக்கின்றன. அந்த கிப்ஸி சந்திராபாயின் கண்களில் அவள் எதிரி தோற்றுமாறு செய்யப்போகிறாளாம்." என்றாள்.

சங்கரதாஸ் "சந்திராபாயின் கண்கள்மேல் ஒரு குட்டையைக்கட்டியா?" என்றதே ஜானகியம்மாள் ஆம் என்றாள். சங்கரதாஸ் "சீக்கிரம். உடனே யதை யெடுத்து விடச்சொல் சீக்கிரம்! சீக்கிரம்!! சீக்கிரம்!!!" என்றான்.

சங்கரதாஸின் சமாசாரம் ஜானகியம்மாளுக்கு நன்றாகத்தெரியும். அவன் அனுவசியமானதைக் கூறமாட்டானென்றும் சந்திராபாயின் கண்களில் கட்டப்பட்ட குட்டையால் அவளுக்கு ஏதோ ஆபத்திருக்கிறதென்று உடனே ஜானகியம்மாள் புத்திக்குப் புலப்பட்டு விட்டது.

ஆகலின் ஜானகியம்மாள் மிகத் துரிதமாய் ஓடிப் போய் சந்திராபாயின் கண்களின்மேலிருக்கும் குட்டையை யவிழ்த்தெறிந்து விட்டாள்.

அதைக்கண்ட கிப்ஸி வேடமணிந்த சின்னி ஆயினும் தன் காரியம் பலித்ததென்று சந்தோஷத்தோடு தட்டென்றெழுந்தாள். ஏனெனில் சந்திராபாய் குட்டையை மூன்று நான்கு நிமிடங்களுக்கதிகமாகவே கட்டிக்கொண்டிருந்தாள். ஜானகியம்மாள் "அடி கள்ளியே! ஓ ஜகநாதம் சீக்கிரம், உதவி உதவி" என்று கூவினாள்.

* * * *

நாகம்மாள் வீட்டிலிருக்கும் சங்கரதாஸ் மறுபடி ஜானகியம்மாளைக் கூப்பிட்டபோது ஒரு சங்கதியும் கிடைக்கவில்லை.

அவன் டெலிபோன் காரியாலயத்தைக் கூப்பிட்டுக் கேட்ட போது அவர்களுக்கும் ஒரு சங்கதியும் கிடைக்கவில்லை.

இதற்கிடையில் வரதாஸிங் மெதுவாய் மூர்ச்சை தெளிந்து எழுந்து நிற்க முயன்றான். அவன் புத்தி கலங்கி யிருந்தாலும், "சங்கரதாஸ் ஏதோ முக்கியமான சங்கதியை யறிந்து வேலைசெய்கிறான், இன்றேல் நம்மை இவ்வளவு காலம் அசட்டையாய் விட்டிரான்" என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டான்.

சங்கரதாஸ் டெலிபோன் எந்திரத்தை முடுக்கி முடுக்கிப் பார்த்துக் கடைசியில் வெறுப்போடு விட்டு விட்டதைக் கண்ட வரதாஸிங் ஏதோ அதிருப்தியான கெட்ட சங்கதி நிகழ்ந்திருக்கிறது என்றுணர்ந்தான். சங்கரதாஸ் மிக்க கோபத்தோடும் வெறுப்போடும் முதலில் நாகம்மாளை நோக்கினான். பிறகு வரதாஸிங்கை நோக்கினான். தான் இவ்வளவு துரிதமாய்ச் சமாளித்து எழுந்து கொண்டதைப்பற்றி சங்கரதாஸ் வியப்போடு தன்னை நோக்குகிறான் என்று வரதாஸிங்குக்குப் புலப்பட்டது.

சங்கரதாஸ் வரதாஸிங்கை நோக்கி "நண்பனே! உனக்கு எப்படி யிருக்கிறது?" என்றான். வரதாஸிங் "நான் சரியான நிலைமை யடைந்து விட்டேன்" என்றதே சங்கரதாஸ் "அப்படியாயின் இப்பெண்மேல் காவலிருக்க உன்னால் முடியுமா?" என்று கேட்டான்.

சங்கரதாஸ் உடனே சந்திராபாயின் க்ஷேமத்தைக் கவனிக்கக் கருதுகிறான் என்றுணர்ந்த வரதாஸிங்,

"ஆகா தடையின்றி பார்த்துக் கொள்ளுகிறேன். இன்னொருமுறை யிவள் என்னை யேமாற்றுவதைச் சற்று பார்க்கிறேன்" என்றான்.

சங்காதாஸ் தன் கைத்துப்பாக்கியை வாதாஸிங்கிட மளித்து "வாதாஸிங்! இதைப் பத்திரமாய்க் கையிலேயே ஆயத்தமாய் வைத்துக்கொண்டிரு. இவள் மகா கொடிய இராக்கதியாகிய பெரியகள்ளி. இவள் நிற்கும் நிலையிலேயே நிற்கவேண்டும். அப்படியிப்படி இவள் நகர்ந்தாலும் இங்குள்ள எந்த வஸ்துவையேனும் தொட்டாலும் உடனே முன்பின் யோசியாமல் சுட்டுத் தள்ளிவிடு. உன்தேகம் சரியான நிலைமைக்கு வந்ததே யிவளை இரசாயன சாலை யறைக்குக் கொண்டு வந்துவிடு" என்று கூறிவிட்டுத் துரிதமாய்ப் போய்விட்டான்.

---

## 36-வது அத்தியாயம்.

தன் அத்தை வந்து அவ்வாறு துரிதமாகத் தன் கட்டை யவிழ்த்தெறிந்ததைக்கண்ட சந்திராபாய் "அத்தை! ஏன்? என்ன சமாசாரம்?" என்றாள்.

ஜானகியம்மாள் கிப்ஸியை நோக்கி அடி படுமோசக் கள்ளியே என்று வைதுவிட்டு, சந்திராபாயை நோக்கி "ஏன் சங்கரதாஸ் இப்போதுதான் கூப்பிட்டு இவள் உன் கண்களின்மேல் எதையும் வைத்துக் கட்ட விடவேண்டாம் என்று கூறினார். அவ்வளவுதான் நான் இன்னும் அதிகமாகக் கேட்பானேன். ஓடிவந்ததும் இதை யவிழ்த்தெறிந்தேன்" என்றாள்.

கள்ள கிப்ஸி எப்படித் தப்பியோடலாம் என்று அறையின் நாற்புறங்களையும் பார்த்து விழிக்கிறாள். அச்சமயம் ஜகநாதன் அங்கு துரிதமாக வந்தான். அவனைக்கண்டதே

ஜானகியம்மாள் கோபத்தோடு "ஜகநாதம்! இக்கள்ளியைப் பிடித்துக்கொள்" என்றாள்.

ஜகநாதன் ஒரு பெண்பிள்ளையைப் பிடிப்பது மிக்க கஷ்டமில்லையென்றெண்ணி அவளருகில் சென்றான். அச்சமயம் அவள் அபூர்வபலங்காட்டி அவனை நெக்கித் தள்ளினாள். அந்தச்சமயம் ஜெகநாதன், அங்கிருந்த செய்கை நீர்க்குட்டையின் ஓரத்திற்குச் சமீபத்திலிருந்ததால் அதன் படி காலில் தடுக்க, தன்னால் கூடியவரை சமாளித்துப் பார்த்தும் முடியாமல் தடாலென்று குட்டையில் வீழ்ந்து விட்டான்.

கிப்ஸி உடனே யங்கிருந்த செடிகளில் நுழைந்து ஓட்டம்பிடித்தாள். சந்திராபாயும் ஜானகியம்மாளும் அவளைத் தூக்கிக்கொண்டு ஓடினார்கள். அந்தச் சிறுதோட்டத்தைச்சுற்றிக் கண்ணாடிச் சுவர்போல் வேலியிருக்கிறது. அதன் ஓரத்தில் ஒரு பழையநாற்காலி கால் உடைந்து கிடந்தது. கிப்ஸி அந்த நாற்காலியைத்தூக்கி ஓங்கிக் கண்ணாடியின்மேலடித்து, அங்கு உண்டான பெரிய துவாரத்தில் மிக்க ஜாக்கிரதையாக நுழைந்து வெளித்தோட்டத்தில் ஓடினாள்.

அதற்குள் குட்டையில் வீழ்ந்த ஜெகநாதன் அதிலிருந்து எழுந்து உடைகளிலிருந்து நீர் ஒழுக சந்திராபாயும் ஜானகியம்மாளும் இருக்குமிடத்தை நோக்கி யோடி வந்தான். அப்போது அவர்கள் ஓடும் கிப்ஸியைக் கண்ணாடித் துவாரத்தின் வழியாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவள் அவர்கள் கண்களுக்குப் புலப்படவில்லை. ஜகநாதனும் அக்கண்ணாடி வழியாய் நோக்கினான். அவள் தப்பித்துக்கொண்டு போய்விட்டாளென்றே தோன்றியது.

உண்மையில் அவள் கொஞ்சதூரம் ஓடியதும் திகிலாலும் ஆயாசத்தாலும் உட்கார்ந்து விட்டாள். இவர்கள்

சென்றிருந்தால் அவளைப் பிடித்துக்கொண்டே யிருக்கலாம். ஆனால் இவர்கள் மூவரும் அவள் இருக்கும் திக்கை விட்டு விட்டு மற்றத் திக்குகளில்தான் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள்.

அச்சமயம் வீதியில் ஒரு வண்டி அதிவேகமாய் வந்து சந்திராபாயின் வீட்டெதிரில் நின்றதும் சங்கரதாஸ் துரிதமாய் அவ்வண்டியினின்று கீழிறங்கியதும் பாய்ந்து வீட்டிற்குள் ஓடி சந்திராபாயின் அறைக்குச்சென்றான். அங்கு வேலைக்காரியாகிய மாரி என்பவள் மிக்க திகிலடைந்த முகத்தோடு அங்கிருந்து பின்னோக்கிச் செல்வதைக்கண்டு "என்னசங்கதி? எங்கே சந்திராபாய் முதலியவர்கள்?" என்றான்.

மாரி அவர்கள் சிறுதோட்டத்தி லிருக்கிறார்கள். கண்ணாடி யுடைக்கப்பட்ட சத்தம் கேட்கவில்லையா?" என்றாள். சங்கரதாஸ் "என்ன? கண்ணாடியா!"என்றதும் துரிதமாய்த் தோட்டத்திற்கு ஓடினான்.

கிப்ஸி யுடனே வெளியிற் சென்றிருந்தால் சங்கரதாஸினிடம் சிக்கிக்கொண்டிருப்பாள். அவள் அங்கு வீழ்ந்ததே நற்காலமாயிற்று. சற்றுநேரத்தில் சமாளித்துக்கொண்டு எழுந்து இதுதான் சமமம் என்று தோட்டத்தின் பின்பக்க வழியே ஓடிப்போய்விட்டாள். அச்சமயம் சங்கரதாஸ் வீட்டிற்குள் வந்திருக்கிறான். அவன் சந்திராபாய் முதலியவர்கள் இருக்குமிடத்திற்கு வந்ததும் என்ன சங்கதி என்று ஆவலோடு கேட்டான்.

அவர்கள் "ஓ! அந்தக் கிப்ஸிக்கள்ளி இதோ இந்த வழியே யோடிவிட்டாள்" என்று கண்ணாடியிலிருந்த துவாரத்தைச் சுட்டிக்காட்டினார்கள். சங்கரதாஸ் "அந்தச் சனியன் ஒழியட்டும். ஓடிவிடும்படி விட்டுவிட்டுப் பேசுவதில்

பயனில்லை. நடந்த சங்கதி என்ன? கூறு சீக்கிரம்" என்று சந்திராபாயைக் கேட்டான்.

ஜானகியம்மாள் தான் சந்திராபாயின் கண்களிலிருந்து அவிழ்த்துக் கீழேயெறிந்த குட்டையையெடுத்து அவன் காத்திலளித்து "இதோ இக்குட்டையை யந்தக்கிப்ஸி சந்திராபாயின் கண்களில் கட்டினுள்" என்றுள். சங்கரதாஸ் அக்குட்டையை வாங்கிப் பார்த்தான். அவன் அதில் ஏதோ மறைத்து வைத்திருக்கும் என்று சோதிப்பவன் போலப் பார்த்தான். ஆனால் அதில் ஒன்றுமில்லாததைக் கண்டு மிக்க வியப்படைந்து சந்திராபாயையும் ஜானகியம்மாளையும் மாறி மாறி நோக்கினன்.

சந்திராபாய் சங்கரதாஸை நோக்கி "எந்தக்குட்டையைக் கேட்கிறாய்? அந்த கிப்ஸி என் கண்களில் கட்டின குட்டையா? அது இதோ இருக்கிறது." என்று கூறிக் கொண்டே நாற்காலியின் கீழிருந்த ஒரு குட்டையை யெடுத்து அவனிடமளித்து,

"அந்தக்கிப்ஸி இக்குட்டையைத்தான் என் கண்களில் கட்டிக்கொள்ளும்படி கூறினள். அச்சமயம் நான் என் குட்டையைக் கையில் வைத்திருந்தேன். அவள் குட்டை ஒருபக்கம் மாசடைந்திருந்தது. அவள் குட்டையை யென்னிட மளித்துவிட்டு ஒருபக்கமாய்த் திரும்பினுள். நான் உடனே யவள் அளித்த குட்டையை நாற்காலியின்கீழ் எறிந்துவிட்டு என்குட்டையைக் கண்ணில் கட்டிக்கொண்டேன்" என்றுள்.

சங்கரதாஸ் அக்குட்டையைச் சோதித்தபோது அதன் ஓரத்தில் ஏதோ தடிப்பாய் இருப்பதாகப் புலப்பட்டது. அது குட்டையின் ஓரத்தில் வைத்துத் தைக்கப்பட்டிருந்தது.

சங்கதாஸ் அதைக் கிழித்தெடுத்துப் பார்த்தபோது ஒரு சிறு கண்ணாடிக்குழாயில் ரேடியம் என்ற மருந்து இருப்பதைக்கண்டான். உடனே சந்திராபாய் தெய்விகமாய்த் தப்பித்துக்கொண்டதை யறிந்ததும் அவன் நிப்பிரமை யடைந்து பேசவேமுடியாமல் திகைத்து விட்டான். கடைசியில் அவன் சந்திராபாயை நோக்கி,

"சந்திராபாய்! நீ கடவுள் தயவால் தப்பித்துக்கொண்டாய். இன்றேல் உனக்கு அவள் குட்டையை எறிந்துவிட்டு உன் குட்டையைக் கட்டிக்கொள்ள உனக்குயோசனை யுதித்திருக்காது. அந்தோ! நீ யிக்குட்டையை மட்டும் இரண்டு மூன்று நிமிடங்கள் கண்களில் கட்டிக்கொண்டிருந்தால் சில நிமிடங்களி லில்லாவிட்டால் சில நாட்களில் - ஐந்தாறு நாட்களுக்குள் உன் கண்கள் அடியோடு குருடாய்ப்போம். உனக்கு அதைப்பற்றி முதலில் தெரியாவிடினும் சீக்கிரத்தில் உன் கண்கள் குருடாய் விடும்'' என்றாள்.

இதைக்கேட்ட சந்திராபாயும் ஜானகியம்மாளும் திகிலடைந்து விழித்தார்கள். சந்திராபாய் அத்தகைய ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்டபோதிலும் அத்தகைய ஆபத்திலிருந்தோமென் றுணர்ந்ததே அவர்கள் மனம் திடுக்கிட்டுக் கலக்கமடைந்தது. அந்த ஆபத்து கழிந்து போய்விட்டாலும் அதை நினைத்தபோது சங்காதாஸ் உளம் நடுங்கியது. அச்சந்தர்ப்பத்தில் அவன் தான் விட்டுவந்த நாகம்மாளையும் வரதாஸிங்கையுங் கூட மறந்து விட்டான்.

பிறகு திடீலென்று அவர்கள் நினைப்பு வந்ததும் அவன் அவர்களை நோக்கி "ஆ! நான் வரதாஸிங்கை யொரு ஸ்திரீயின்மேல் காவல் வைத்துவிட்டு வந்தேன். அவளை இரசாயன சாலைக்கு அழைத்து வரும்படி கூறிவிட்டு வந்தேன். அவன் இதுகாறும் அவளை யழைத்துக்கொண்டு இரசாயனசாலைக்கு

வந்திருக்கவேண்டும். நீயும் தயவுசெய்து உடையணிந்து என் கூட வரக்கோருகிறேன். ஏனெனில் உன்னால் ஒரு உதவி கிடைக்கக்கூடுமென்று நம்புகிறேன். அப்பெண்ணினிடமிருந்து சங்கதிகளைக் கிரகிப்பதற்கு எனக்கு உதவி செய்யலாகும். அவள் மிக்க தைரியமும் பிடிவாதமும் உண்மையை வெளியிடாத சுபாவமுமுடையவள். ஆயினும் அவள் மனதிலிருக்கும் உண்மைகளை யறிந்து கொள்ளத் தக்க ஒரு அபூர்வமான மார்க்கம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அதன்மூலமாய்க் கடைசியில் இப்பாதக காரியங்களுக்கெல்லாம் மூலகாரணமாகிய அச்சீனுக்காரனைப்பற்றிய உளவை யறியலாமென்று கருதுகிறேன்" என்றான்.

அவன் வார்த்தைகளைக்கேட்டதே சந்திராபாய் தன் தோழியாகிய மாரியை யழைத்துத் தன் மேல் உடை போர்வை முதலியவற்றை யெடுத்து வரும்படி கூறினாள். சில நிமிடங்களுக்குள் மாரி சந்திராபாயின் போர்வை மேற்சட்டை முதலியவற்றைக் கொண்டு வந்தாள். உடனே சங்கரதாஸும் சந்திராபாயும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

*　　*　　*　　*

சங்கரதாஸ் நாகம்மாள் வீட்டில் வரதாஸிங்கை நோக்கி "நீ சற்று சமாளித்துக்கொண்டதும் இவளை நமது இரசாயனசாலையறைக்குக் கொண்டுபோ; நான் துரிதமாக வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்ற சுமார் அரைமணி நேரத்திற்குள் வரதாஸிங் தன் கைத்துப்பாக்கியை யெடுத்து நாகம்மாள் முன் நீட்டிக்கொண்டு "நீ யுன் மேலுடையை யணிந்து எனக்குமுன் நான் கூறுகிறபடி நட. வழியில் ஏதேனும் கூற வாய்திறந்தாயோ தட்சணம் உன்னைச் சிறை

செய்து அனுப்பிவிடுவேன். பேசாமல் என்கூடவே வந்தால் தப்பித்துக்கொண்டு வந்துவிடவும் கூடும்'' என்றான்.

நாகம்மாள் அவ்வாறே ஒரு வார்த்தையும் கூறாமல் தன் மேற்சட்டை போர்வை முதலியவற்றை யணிந்து புறப்பட்டாள். அச்சமயந்தான் சந்திராபாயின் வீட்டிலிருந்து "தப்பினது தம்பிரான் புண்ணியம்'' என்று ஓடிவந்த கள்ளக் கிப்ஸியாகிய சின்னி பெருமூச்சு விட்டுக்கொண்டு ஆயாசத்தோடு நாகம்மாள் வீட்டிற்குள் நுழைந்தாள். அவள் உள்ளேயிருக்கும் கூடத்தைக்கடந்து அறைக்குள் நுழைய முயலும்போது, அறையிலிருந்து நாகம்மாளும் வரதாஸிங்கும் வெளிவருவதை யறிந்து அங்கு ஒரு மூலையில் மறைந்து நின்றாள்.

நாகம்மாளும் வரதாஸிங்கும் அறையிலிருந்து வெளியில் கூடத்திற்கு வந்ததையும் அங்கிருந்து வெளியில் செல்வதையும் கண்டாள். வரதாஸிங் கண்களுக்கு அவள் புலப்படவில்லை. வரதாஸிங்கும் நாகம்மாளும் வீட்டைவிட்டு வெளிப்பட்டதும், சின்னி பூனைபோல் எட்டவே அவர்கள் பின் தொடர்ந்தாள். நாகம்மாள் தன் மனமொப்பி வரதாஸிங்கின்கூடச் செல்லவில்லையென்று அவள் நன்றாக அறிவாள். ஆதலின் வரதாஸிங் அவளைப் பயமுறுத்திப் பலாத்காரமாக அழைத்துச் செல்கிறான் என்றுணர்ந்து, அவர்கள் செல்லுமிடத்தைத் தெரிந்துகொள்ளத் தீர்மானித்து அவர்களைப் பின்தொடர்ந்து சென்றாள்.

வரதாஸிங்கும் நாகம்மாளும் சங்கரதாஸின் இரசாயன சாலையறையைச் சேர்ந்தார்கள். அவர்கள் உள்ளே செல்லும்போது வெளியில் சற்று தூரத்திலிருந்து சின்னி பார்த்துக்கொண்டிருக்கிறாள் என்பது வரதாஸிங்குக்குத் தெரியாது.

அறைக்குள் சென்றபின் வரதாஸிங் நாகம்மாளை யொரு நாற்காலியி லுட்காரவைத்தான். இவர்கள் அங்கு வந்து சேர்ந்த சற்றுநேரத்திற்குள் சங்கரதாஸனும் சந்திராபாயும் அங்கு வந்தார்கள். நாகம்மாளை யங்கு கொண்டுவந்து என்னசெய்வது என்பதைப்பற்றி சங்கரதாஸ் முன்னடியே யாவும் தனக்குள் சரியாக ஆலோசனை செய்து வைத்திருக்கிருன். ஆதலின் அவன் அங்குவந்து நாகம்மாளைக் கண்டடதும் தான் ஆயத்தம்செய்து முன்பு சந்திராபாய்க்குக் காட்டிய அந்த நாற்காலியில் அவளை யுட்காரவைத்து அவள் புயங்களை யதில் கட்டிவிட்டான்.

அதன்பின் வரதாஸிங்கையும் சந்திராபாயையும் நோக்கி "நீங்கள் இப்போது தயைசெய்து பக்கத்திலிருக்கும் அறையிற் சென்றிருங்கள்" என்று கூறினன்.

அவர்கள் அவன் பிரியப்படியே பக்கத்தறைக்குச் சென்றார்கள். சங்கரதாஸ் முன்பு நாம் கூறிய ஒருவித வட்டமான கருவியை-சங்கரதாஸ் சந்திராபாய்க்கு விவரித்துக் கூறியதை-மனிதரின் மனதிலிருப்பதை யறிவிக்கும் சக்தியுடையதை யெடுத்துச்சென்று நாற்காலியின் புயத்தின் மறைவில் வைத்துக் கட்டிவிட்டான். அவன் அப்பில்லையை யங்கிருந்த கம்பிகளில் பிணைத்துவிட்டான். பிறகு வரதாஸிங்கிடமும் சந்திராபாயிடமும், அது நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் ஆளின் உள்ளத்தை வெளியிடும்படித் தூண்டக் கூடிய சக்தியையுடைய தென்பதைப்பற்றிக் கூறினன்.

சங்கரதாஸ் அந்த அறைக்கும் பின் அறைக்கும் இடையிலிருக்கும் கதவை வேணுமென்றே திறந்து வைத்துவிட்டான். ஆயினும் தான் கூறிய சங்கதி நாகம்மாளுக்குக் கேட்காவண்ணம் கூறினன். சங்கரதாஸ் தன் ஏற்பாட்டைப் பற்றிக் கூறியபின் "விபாங்கன் மறைந்திருக்கும் வீடு பாலை

வீதியி லிருக்கிறதென்று மட்டும் நமக்குத் தெரியும். இந்த எந்திரம் சரியாய் வேலைசெய்தால் இவள் அந்த வீட்டின் இலக்கத்தை வெளியிட்டு விடுவாள். அவள்வரையில் வேணு மென்று பேசாமலிருக்க முயலலாகும். ஆனால் இந்த எந்தி ரத்தின் தூண்டுதலைத் தடுக்க அவளால் முடியாது" என்று குசுகுசுவென்று கூறினான். இச்சங்கதிகளைக் கேட்ட சந்திரா பாயும் வரதாஸிங்கும் மிக்க வியப்படைந்தார்கள்.

இங்கு விவகாரங்கள் இப்படி நடந்துகொண் டிருக்கை யில், வரதாஸிங்கும் நாகம்மாளும் சங்கரதாஸின் இரசாயன சாலை யறைக்குள் நுழைவதைக்கண்ட கள்ளியாகிய சின்னி இவர்கள் அங்குதான் தங்கிவிட்டார்கள் என்பதை யறிந்து கொண்டதும் அங்கிருந்து நோய்ச் சீனக்காரர் வசிக்கும் பிரதேசத்திற்குச் சென்றாள்.

சின்னி அப்பிரதேசத்தில் நுழைந்ததும் நோரக விபா ங்கனது மறைவிடமாகிய வாசஸ்தலத்திற்குள் நுழைந் தாள். விபாங்கன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு, முன்பு நாகம்மாளை டெலிபோனில் கூப்பிட்டபோது வேறு யாரோ ஒரு ஆடவன் பதிலுக்குக் கூப்பிட்டதால் உண்டான கலவரத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிறான்.

உண்மையில் சங்கரதாஸின்மேல் எப்படியேனும் வஞ் சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற மூடத்தனமான கெட்ட எண்ணத்தால் அவன் மறுபடி மறுபடி சங்கர தாஸுக்கும் சந்திராபாய்க்கும் தீங்கிழைக்க முயல்கின் றானேயன்றி, ஒவ்வொருமுறையும் நமது முயற்சி பல னளிக்குமா என்ற சந்தேகமும், இதில் நமக்கே கெடுதி நேரிடுமோ என்ற சந்தேகமும் பீதியும்மட்டும் அவன் மனதைவிட்டு நீங்கவில்லை.

அதுபோலவே யிப்போதும் அவன் பீதியோடேயே யிருந்தான். அதோடு அந்த டெலிபோன் சங்கதி நடந்தது

முதல் அவன் கலவரம் அதிகமாய்விட்டது. அவன் அதே சிந்தனையோடு அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.

அச்சமயம் வேலையாள் வந்து சின்னி வந்திருக்கிறாள் என்று கூறினான். விபாங்கன் "உடனே யவளை யுள்ளே யழைத்துவா" என்று ஆவலோடு கூறினான். மறுநிமிடம் அக்கள்ளி விபாங்கன்முன் வந்து பீதியோடு நாகம்மாள் தன்னை சந்திராபாயின் வீட்டிற் கனுப்பியதையும் தான் அங்கு சென்று செய்த காரியத்தையும் கூறினாள். அது வரையில் கேட்டதே விபாங்கனுக்கு மிக்க சந்தோஷ முண்டாயிற்று. அக்குட்டையை மூன்று நான்கு நிமிடங்கள் சந்திராபாய் தன் கண்களில் கட்டிக்கொண்டிருந்தாள் என்பதை யறிந்ததே அவள் கட்டாயம் குருடாகிவிடுவாள் என்று கருதித் திருப்தி யடைந்து விட்டான்.

சின்னி பிறகு நடந்த விஷயங்களைக் கூறத்தொடங்கித் தான் அங்கிருக்கையில் சங்கரதாஸிட மிருந்து டெலிபோனில் ஜானகியம்மாளுக்குச் சமாச்சாரம் வந்ததையும், அவள் வந்து சந்திராபாயின் கண் கட்டை யவிழ்த் தெறிந்ததையும், பிறகு தான் அங்கிருந்து தப்பி வந்ததையும் கூறியபோது, விபாங்கன் முகம் சோர்வடைந்து விட்டது. ஏனெனில் தன் நடக்கையைச் சங்கரதாஸ் எப்படியோ அறிந்து கொண்டான் என்று அவனுக்குத் தெரிந்தது. அதுவே அவன் மனக் கலக்கத்தை யதிகமாக்கப்போதும். ஆனால் அதோடு தான் சந்திராபாயின் வீட்டிலிருந்து தப்பித்துக் கொண்டு நாகம்மாள் வீட்டிற்கு வந்தபோது, வரதாஸிங்கும் அவளும் அங்கிருந்து புறப்பட்டு சங்கரதாஸின் இரசாயனசாலை யறைக்குள் சென்றார்களென்பதைக் கூறியபோது அவனுக்கு மிக்க திகில் உண்டாய்விட்டது.

ஏனெனில் சங்கரதாஸ் தன் எண்ணங்களைத் தெரிந்து கொண்டு அதற்குத் தக்கபடி வேலைசெய்கிறானென்றும் தன்

ளைப் பிடிக்க மிக்க சாமார்த்தியத்தோடு வேலை செய்கிருனென்றும் அவன் மனதிற்கு நன்ருகப் புலப்பட்டுவிட்டது. நாகம்மாள் தன் நம்பிக்கையான ஆட்களில் ஒருத்தி. அவளுக்குத் தன் இரகசியங்களெல்லாம் பெரும்பாலும் தெரியும். அப்படிப்பட்டவள் சங்கரதாஸின் கையில் சிக்கிக் கொண்டவரையில் சங்கரதாஸ் அவளிடமிருந்து தந்திரமாகத் தன்னைப்பற்றிய சங்கதிகளைக் கிரகித்துக்கொண்டால் தனக்குப் பெரிய ஆபத்தாக முடியும் என்று அவன் புத்தியில் உறுத்தியது.

ஆகையால் சின்னி கடைசியாய்க் கூறிய சங்கதியைக் கேட்டதே அவன் உளம் நடுங்கித் திகிலும் கோபமும் அதிகமாய் விட்டன. அவன் ஒரு விநாடியே சிந்தித்தான். எள்ளளவு ஆலசியம் செய்யினும் ஆபத்தாகமுடியும். உடனே தன் வேலைக்காரனை நோக்கி "சீக்கிரம் நான் வெளியிற் செல்லும்போதணியும் உடைகளை யெடுத்துவா" என்ருன். வேலையாள் அவற்றைக் கொண்டுவந்ததும் விபாங்கன் அவைகளை யணிந்துகொண்டு சின்னியை நோக்கி "நான் திரும்பிவரும்வரையில் நீ யிங்கேயே யிரு" என்று கூறினன்.

விபாங்கன் ஒரு மூடு வண்டியில் ஏறிக்கொண்டு துரிதமாக வீட்டிலிருந்து புறப்பட்டு அதிவேகமாய் வண்டியைச் செலுத்திக் கொண்டு சங்கரதாஸின் இரசாயனசாலை யிருக்கும் கட்டிடத்திற்குச் சில கஜங்கள் தூரத்தில் வண்டியை நிறுத்திவிட்டு தான் கீழிறங்கிக் கட்டிடத்தில் நுழைந்து முன் கூடத்தைக் கடந்து இரசாயனசாலையி னருகில் சென்ருன்.

விபாங்கன் அந்த அறையின் முன் நின்று உற்றுக்கேட்டான். உள்ளிருந்து எவ்வித சந்தடியும் கேட்கவில்லை. தன்

னிடமிருக்கும் கள்ளச் சாவியையெடுத்து கதவைத் திறக்க நினைத்தான். அதற்குள் பக்கத்தில் இருந்த நெகிடித்தீயிருக்குமிடத்தின் பக்கமாய் ஒரு பாதை செல்வதைக் கண்டான்.

விபாங்கனுக்குக் கலவரமுண்டாயிற்று. நேரே யுள்ளே செல்லலாமா! இந்தப் பக்கவழிபோய்ப் பார்க்கலாமா என்று சிந்தித்தான்.

---

## 37 - வது அத்தியாயம்

விபாங்கன் கடைசியில் இரசாயன சாலையறையின் கதவைத்திறக்காமலே நெகிடித் தீயிருக்குமிடத்தின் பக்கவழியாகச் செல்வதென்று தீர்மானித்துப் பூனைபோல் அவ்வழியே சென்றான். அவ்வழி பின் அறைக்குத் தான் செல்கிறது. ஆதலின் விபாங்கன் சந்திராபாய் சங்கரதாஸ் முதலியவர்கள் அச்சமயமிருக்கும் அதே யறையின் முன் சென்றான்.

அச்சமயம் சங்கரதாஸ் வாதாஸிங் சந்திராபாய் மூவரும் ஒரு வட்டமான கருவியை யுற்றுநோக்கியபடி யிருக்கிறார்கள். முன்னேயுள்ள அறையில் நாகம்மாள் கட்டப்பட்டிருக்கும் நாற்காலியின் புயத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் பில்லைபோன்ற கருவியில் கட்டப்பட்ட கம்பிகளின் மறுமுனைகள் இப்போது இவர்கள் இருக்கும் பின் அறையில் ஒரு மேஜைமேலுள்ள மற்றொரு பில்லையின் கருவியில் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

முன் அறையில் நாகம்மாள் கட்டப்பட்டிருக்கும் நாற்காலியில் இருக்கிற கருவியிலுள்ள முள் எப்படி யசைந்து

சங்கதிகளை யறிவிக்கிறதோ அந்தப்படியே இவர்கள் எதிரி லிருக்கும் கருவியும் காட்டும். சங்கரதாஸ் அக்கருவியின் வேலையைப்பற்றி சந்திராபாய்க்கும் வரதாஸிங்குக்கும் விவ ரித்துக் கூறிக்கொண்டிருக்கிறான். அப்போது தான் விபாங் கன் அங்கு வந்து சந்தில் நோக்கியதும் உடனே திரும்பி முன்னுள்ள இரசாயன அறையை நோக்கிச் சென்றான்.

சங்கரதாஸ் வாயிற்படியில் வந்து நின்றுகொண்டு "வரதாஸிங்! நாம் அக்கள்ளப்பயலாகிய விபாங்கன் பாலைத் தெருவில் இருக்கிறான் என்றவரையில் தெரிந்து கொண் டோம். இப்போது ஒவ்வொரு எண்ணாகக் கூறிக்கேள். இன்ன எண்ணென்ற உண்மை அகத்தியம் தெரிந்துவிடும்" என்றான்.

வரதாஸிங் பாலைத்தெரு என்றதே அக்கருவியிலிருந்த முள் துடிப்பதுபோல் அசைந்ததும் பேசாமலிருந்துவிட் டது. பிறகு 1-வது எண் என்றான். முள் அசையவில்லை. பிறகு மெதுவாய் இரண்டு மூன்று நான்கு ஐந்து என்றான். நாகம்மாள் மனம்விடாமல் ஒரே பிடிவாதமாக விருப்பது போல் தோன்றியது. அவள் வெளிக்கு அப்படியிருந்தாலும் அந்த எந்திரத்தின் வேலையைத் தடுக்கவென்னமோ அவ ளால் முடியவில்லை.

சங்கரதாஸ் அவ்வாறு கூறிக்கொண்டே யிருக்கையில் அந்த வட்டமான எந்திரத்திலிருந்து முள் மெதுவாக மேலேறிக்கொண்டே யிருந்தது. சந்திராபாயும் வரதாஸிங் கும் அதையே கவனத்தோடு நோக்கிக்கொண் டிருந் தார்கள்.

வெளியில் இவர்களிருக்கும் அறையைப் பார்த்துவிட் டுத் திரும்பிய விபாங்கன் மறுபடி இரசாயனசாலை யறையை நோக்கிச் சென்றான். அவன் அந்த அறையின் கதவோரம்

நின்று உற்றுக்கேட்டான். உள்ளே எவ்விதச் சந்தடியு மில்லையென்று தெரிந்தது. உடனே தன்னிடமிருக்கும் கள்ளச்சாவியால் கதவைத்திறந்து மெதுவாக உள்ளே நுழைந்தான். அந்த ஒரு விநாடி நின்று நாற்புறங்களிலும் நோக்கினான். நாற்காலியில் கட்டப்பட்டிருக்கும் நாகம்மா ளைக் கண்டான். பேசாமலிரு என்று மூக்கின்மேல் விரலை வைத்துச் சமிக்கை காட்டினான்.

சங்கரதாஸ் பின் அறையில் விபாங்கன் ஒளிந்திருக்கும் வீட்டின் இலக்கத்தையறிய முயற்சி செய்துகொண்டிருக் கிறான். ஆச்சு சரியான எண்ணை எந்திரம் காட்டும் சமயம். அப்போது விபாங்கன் தன் கைத்துப்பாக்கியால் மேல் நோக்கி இருமுறை சுட்டான்.

அப்படியவன் சுடுவதற்கு ஒரு விநாடிக்குமுன் எந்தி ரத்திலிருந்த முள் திடீலென்று பத்து பனிரண்டு புள்ளிகள் மேல் தாண்டியது. வரதாஸிங் அதை உயரத்தூக்கிப் பிடித்துக்கொண்டு "என்னவிந்தை! என்ன இதன் அர்த் தம்?" என்றான். சங்கரதாஸும் வியப்போடு அதை உற்று நோக்கினான். அச்சமயம் துப்பாக்கிச்சத்தம் கேட்டதும் முள் தட்டென்று அடியில் இறங்கி விட்டது.

சத்தம் கேட்டதும் சங்கரதாஸ் முதலியவர்கள் இரசா யன அறைக்கு ஓடினார்கள். அங்கு போய்ப் பார்த்தபோது நாற்காலியில் இருக்கும் நாகம்மாள் பார்வைக்குச் சவம் போல் கிடக்கிறாள். அச்சமயம் அறையில் வேறொரு பூத ரும் காணப்படவில்லை. இருவரும் வெளிக்கூடத்திற்கே யோடினார்கள்.

வரதாஸிங் சங்கரதாஸைப் பின் தொடர்ந்தபோது சந்திராபாயும் அவனைப் பின்தொடர்ந்து சென்று வாயிற்படி யருகில் நின்று அவர்களிருவரும் வெளியில் ஓடுவதைக் கண்

டாள். அவள் அங்கேயே நின்றுகொண் டிருக்கையில் இரசாயன அறையில் மேஜையின்கீழ் ஒளிந்திருந்த விபாங் கன் மெதுவாய் வெளியில் எழுந்து சந்திராபாயின் பின்னுல் சென்று தட்டென்று அவளைப்பிடித்து அறைக்குள் கீழே தள்ளிவிட்டுக் கதவைமூடித் தாளிட்டுக்கொண்டு நாற்காலி யில் கட்டப்பட்டிருந்த நாகம்மாளின் கட்டுகளை யவிழ்த்து விட்டான்.

நாகம்மாள் மூர்ச்சை யடைந்திருந்தபடியால் உடனே சமாளித்தெழுந்துகொண்டாள். வெளிக்கூடத்தில் சென்ற சங்கரதாஸும் வரதாஸிங்கும் அங்கு நோக்கினுர்கள். அங் கும் ஒருவருமில்லை. அச்சமயம் சந்திராபாய் கூச்சலிடும் சத்தத்தைக்கேட்டுத் திரும்பி யோடினுர்கள். ஆனுல் கதவு மூடித் தாளிடப்பட்டிருந்தது.

அதற்குள் விபாங்கன் நாகம்மாளை விடுவித்து விட்ட தும் அங்கிருந்த சாளரத்தின்மேல் ஒரு நாற்காலியையெடு த்து மோதி யவ்வழியாய் நாகம்மாளை வெளிக்கு அழைத்துக் கொண்டு சென்றுன். அவன் பின் அறையின் வழியாகவே செல்லவேண்டும். அவர்கள் சாளரத்தில் நுழையும்போது தான், அச்சமயம் சமாளித்தெழுந்து நின்ற சந்திராபாய் அவர்கள் ஓடிவிடுவதைக்கண்டு கூவினுள்.

பின் அறையின் வழியாகச்சென்ற விபாங்கன் அங் கிருந்த எந்திரபில்லையைக்கண்டு கையில் எடுத்துக்கொண் டான். சந்திராபாய் பாய்ந்து சென்று அதைப் பிடுங்கினுள். விபாங்கன் அதை விடாமல் போராடினுன்.

அதற்குள் சங்கரதாஸும் வரதாஸிங்கும் கதவைத் திறந்து இரசாயன சாலையின்முன் அறையை யடைந்தார் கள். விபாங்கன் சந்திராபாயை மேஜைமேல் தள்ளிக் கொண்டு கத்தியையெடுத்துக் குத்தப்போனுன். அச்சமயம்

ஆட்கள்வரும் சத்தத்தைக்கேட்டு நாகம்மாளை யிழுத்துக் கொண்டு ஓடிவிட்டான்.

சங்கரதாஸனும் வரதாஸிங்கும் உள் அறைக்குச்சென் றதும் சங்கரதாஸ் சந்திராபாயின் க்ஷேமத்தை முன்னே கவனிக்கத் தொடங்கினான். வரதாஸிங் தான் கைத்துப்பாக் கியைக் கையில் பிடித்தபடி விபாங்கனைத் துரத்திச்சென் றான். விபாங்கன் சாளரத்தின் கீழிறங்கி நடப்பதைக் கண் டதும் ஆத்திரத்தோடு சுட்டான். விபாங்கன் தள்ளாடி அதன்பின் தடுமாற்றத்தோடு ஓடத்தொடங்கினான். அதற் குள் வரதாஸிங் ஒன்றின்மேலொன்றாக இரண்டு மூன்று குண்டுகள் விட்டான். ஒருகுண்டு அவன் தேகத்தில் பட்ட தென்றே தெரிந்தது. ஏனெனில் அவன் சட்டென்று தடுமாறி விழப்போனான்.

கள்ளியாகிய நாகம்மாள் அவனைப்பிடித்துத் தாங்கிய படி யழைத்துச்சென்று வீதியில் ஆயத்தமாய்க் காத்திருந்த மூடுவண்டியில் ஏற்றித் தானும் ஏறிக்கொண்டாள். வண்டி வேகமாய்ப் புறப்பட்டது. வரதாஸிங் தன்னிடமிருக்கும் குண்டுகளனைத்தும் ஒழியுமட்டும் சுட்டான். வண்டியின் மேலும் குண்டுகள் பட்டன. ஆனால் வண்டி நிற்காமல் வேகமாய் ஓடியது. இனி வண்டியைத் தொடர்ந்து செல் வதில் பயனில்லையென்று திரும்பி வந்துவிட்டான்.

அவன் இரசாயன அறைக்குத் திரும்பி வந்தபோது சங்கரதாஸ் கலவரத்தால் வீழ்ந்து கிடந்த சந்திராபாய்க்கு உபசாரம் செய்துகொண்டிருக்கிறான். வரதாஸிங் அவர்களை நோக்கி "அக்கள்ளர் தப்பித்துக்கொண்டு போய்விட்டனர். என் குண்டுகளிலொன்று அவனைக் காயப்படுத்தி யிருக்கிற தென்பது உண்மை. ஆயினும் அக்கள்ளச்சிறுக்கி அவனை

யிழுத்து வண்டியிலேற்றிக் கொண்டுபோய்விட்டாள்.'' என்றான்.

சந்திராபாய் "ஆ! நீ சுட்ட துப்பாக்கி வெடிகளை நான் கேட்டேன். இம்முறை கடைசியாக அவனை யொழித்து விட்டாய் என்று கருதினேன்'' என்றாள். முதலில் சந்திரா பாய் க்ஷேமமாகவே யிருக்கிறாள், அவளுக்கொரு ஆபத்து மில்லையென்றுணர்ந்ததே, அதனாலுண்டான நிம்மதியால் சங்கரதாஸ் விபாங்கன் விஷயத்தை யச்சமயம் அடியோடு மறந்துவிட்டான். வரதாஸிங் மொழிகள் அவனுக்கு அதைப்பற்றி நினைவூட்டின.

அவன் அந்த எந்திரத்தகட்டைத்தட்டி "அதைப்பற்றி யவசியமேயில்லை. இடையில் தடைநேர்ந்தால் கடைசியில் எந்திரத்திலிருக்கும் முள் 14 என்ற எண்ணையே குறிப்பித் தது. விபாங்கன் வீடு அதேயெண்ணாக விராவிடின் அதன் சமீபத்திலாவது இருக்கவேண்டும். நாம் எப்படியும் அதைக் கண்டு பிடித்துவிடுவோம்'' என்றான். கடைசியில் மூவரும் சந்தோஷமாகச் சம்பாஷித்தார்கள்.

* * * *

சில நாட்கள் சங்கரதாஸ் தனியே அகாலங்களில் இரசாயனசாலையில் ஏதோ வேலைகள் செய்துகொண்டிருந் தான். அதன் விவரம் அவனுடைய அந்தரங்க நண்பனாகிய வரதாஸிங்குக்குக்கூடத் தெரியாது. சங்கரதாஸ் தன் இரகசி யத்தை யவ்வளவு பத்திரமாய் மறைத்து வைத்துக்கொண் டிருந்தான். ஆனால் அது ஏதோ மிக்க முக்கியமான விசேஷமாகவே யிருக்கும் என்றுமட்டும் வரதாஸிங்குக்குத் தெரியும்.

சங்கு முன்னமே சிறையாக்கப்பட்டிருக்கிறான். விபாங் கன் தப்பித்துக்கொண்டு இரண்டொரு தினங்களே யாகின.

அவனுடைய முக்கிய ஆட்களில் ஒருத்தியாகிய நாகம்மாள் மூலமாய் அவனுடைய இரகசிய வாசஸ்தலத்தை சங்கரதாஸ் அறிய முயன்றதைத் தடுத்துவிட்டான். சங்கரதாஸ் தன் நண்பனாகிய இன்னொரு துப்பறியும் ஆளையும் இவ்விஷயத்தில் உளவறியத் தனக்கு உதவியாய் அமர்த்திக்கொண்டான்.

ஒருசமயம் சங்கரதாஸ் அவசரமாகத் தபால் கடிதங்களைப் பிரித்துக்கொண்டிருக்கையில் ஏதேனும் புது சமாசாரம் கிடைத்ததோவென்று அறிய மிக்க ஆவல்கொண்டிருக்கும் சந்திராபாய் இரசாயன சாலையறைக்கு வந்தாள். வரதாஸிங்கும் சங்கரதாஸின் எதிரில் உட்கார்ந்திருக்கிறான். சங்கரதாஸ் ஒவ்வொரு கடிதமாகப் பார்த்துக்கொண்டே வந்து கடைசியில் ஒரு பெரிய தடித்த கடித உறையையெடுத்துப் பார்த்தான். அதில் இராஜாங்க முத்திரைகள் போடப்பட்டிருந்தன. சங்கரதாஸ் "ஹா இந்திரபுரி நாட்டுத் துரைத்தனத்தாரிடமிருந்து வந்தது" என்று கூறிக்கொண்டே அதைப்பிரித்து உள்ளிருக்கும் கடிதத்தைப் பார்த்ததும் மிக்க சந்தோஷத்தோடு துள்ளியெழுந்து "இதை வாசித்துப் பாருங்கள்" என்று அக்கடிதத்தை யவர்கள் முன் வைத்தான். அக்கடிதத்தில் பின் வருமாறு அச்சியற்றப்பட்டிருந்தது.

இந்திரபுரிநாட்டுத் துரைத்தனத்தைச்சேர்ந்த கடற்படை இலாகா சங்கரதாஸ் பண்டிதருக்கு அறிவிப்பது— தாங்கள் புதிதாய்க் கண்டுபிடித்த அபூர்வமான டார்பிடோ (ஜலத்தின்கீழ் வெடிக்குண்டைச் செலுத்தும்) படகின் மாதிரியை நேற்றுத்தான் நாங்கள் சோதனைசெய்து பார்த்தோம். இதைப்பற்றிய இரகசியம் எங்களிடமே யிருக்கிற வரையில் கடலில் ஒருவரும் எங்களை யெதிர்த்து வெல்ல

முடியாதென்பது நிச்சயம். இதிற் சற்றும் சந்தேகமே யில்லை.

இப்படிக்கு:

டானியல் வால்டர்ஸ்.
இந்திரபுரி துரைத்தனத்தின்
கடற்படைக் காரியதரிசி.

அதை வாசித்துப் பார்த்ததும் சந்திராபாய் "ஓ! உனக்காக நாங்கள் எவ்வளவோ சந்தோஷமடைகிறோம். உனக்கு எவ்வளவோ கீர்த்தி கிடைக்கும்" என்றாள். வரதாஸிங் "ஓ சங்கரதாஸ்! இந்த அற்புதமான எந்திரத்தைப்பார்க்கும் பெரும்புண்ணியம் எங்களுக்கு எப்போது கிடைக்கும்?" என்றான்.

சங்கரதாஸ் "ஆகா, எப்போது வேண்டுமோ அப்போதே" என்று கூறிக்கொண்டே, அங்கிருந்த ஒரு அலமாரியைத்திறந்து ஒரு பெட்டியையெடுத்து, அதன் மற்றொருமாதிரி இதோ விருக்கிறது" என்று அப்பெட்டியைத் திறந்து உருவத்தில் சுருட்டுப் போன்றிருந்த எஃகுத் தகட்டால் செய்த ஒரு வஸ்துவை வெளியிலெடுத்து மேஜைமேல் வைத்தான்.

அது எட்டங்குல நீளமேயுள்ள ஒரு படகுபோற் செய்யப்பட்டிருந்தது. படகிற்கு வேண்டிய அவயவங்களனைத்தும் அதிலமைக்கப்பட்டிருந்தன. அதில் படகை எப்புறம் வேண்டுமாயினும் திருப்புவதற்கும் மற்றக் காரியங்களைச் செய்வதற்கும் பல கம்பிகள் அதில் அமைக்கப்பட்டிருந்தன. சங்கரதாஸ் அது வேலைசெய்யும் மாதிரியையும் அதன் உளவுகளையும் கூறி "நான் அனேகம் மைல்கள் தூரத்தில் உட்கார்ந்துகொண்டு ஒரு சிறு பையனுடைய உதவியைக்கொண்டு இப்படகால் ஒரு பிரம்மாண்டமான

யுத்தக்கப்பலை யொருநொடியில் முழுகடித்து விடக்கூடும்'' என்றான்.

அவன் எவ்வளவோ விவரமாய்க் கூறினும் இவர்களுக்கு அதைப்பற்றிச் சரியாய் விளங்கவில்லை. சங்கரதாஸ் அதைப்பற்றிக் கூறி முடிந்ததும் யாரோ வந்து கதவைத் தட்டினார்கள். வந்தவர்கள் சங்கரதாஸின் நண்பனாகிய சீனனும் அவன் நண்பனுமே. வாதாஸிங் சென்று கதவைத் திறந்ததும் அவர்கள் உள்ளே வந்தார்கள்.

சீனன் சங்கரதாஸுக்கு வந்தனமளித்து "நாங்கள் பாலைத்தெருவில் சென்று ஆராய்ச்சி செய்தோம். அவ்வீதியில் தான் விபாங்கன் வசிக்கிறான். எங்களாற் கூடியவரையில் ஆராய்ச்சி செய்ததில் அவன் வசிக்குமிடம் நீ யுத்தேசித்ததுபோல் பதினான்காவது எண்ணுள்ள வீடேயென்று தெரிகிறது. நான் குருட்டுப் பிச்சைக்காரனைப்போல் வேடமணிந்த ஒருவனை யங்கு வேவுபார்க்க வைத்திருக்கிறேன்'' என்றான்.

சங்கரதாஸும் வாதாஸிங்கும் சீனனோடு கூடப் புறப்பட ஆயத்தமானார்கள். சந்திராபாய் "இது நல்ல கோர்த்தியான சமாசாரமே. நானும் உங்களோடுகூட வரலாமல்லவா?'' என்றாள்.

சங்கரதாஸ் "பேஷ். வெகுகோர்த்தி. நானும் வாதாஸிங்குமே சீனனோடு வருகிறோமென்பது வெளியிற் றெரியலாகாது. அங்கு என்ன சம்பவங்கள் நேருமென்று கூற முடியாது. அப்படியிருக்க நீயாவது அங்கு எங்கள்கூட வருவதாவது'' என்று தடுத்தான்.

சந்திராபாய் தன்னால் கூடியவரையில் கேட்டும் சங்கரதாஸ் அவள்கூட வரும்படி சம்மதிக்கவில்லை. கடைசியில் "நடக்கும் சம்பவத்தை நீங்கள் உடனே வந்து எனக்கு

அறிவிப்பதோடு அந்த டார்பிடோ சங்கதியையும் கூறவேண்டும்" என்றாள். சங்கரதாஸ் மிக்க சந்தோஷத்தோடு அவ்வாறே வாக்களித்தான். அதன்மேல் சந்திராபாய் வண்டியேறித் தன் வீட்டிற்குப் புறப்பட்டாள்.

சங்கரதாஸ் வாதாஸிங் சீனன் முதலியவர்கள் அங்கிருந்து புறப்பட்டு அரைமணிநேரங்கழித்துச் சீனக்காரர் வசிக்கும் பிரதேசத்தை யடைந்தார்கள். அவர்கள் தங்களால் கூடியவரையில் ஒருவர் கண்களுக்கும் புலப்படா வண்ணம் மிக்க ஜாக்கிரதையாகச் சென்றார்கள்.

இவர்கள் கொஞ்சதூரம் சென்றதே ஒரு குருட்டுப் பிச்சைக்காரனைச் சந்தித்தார்கள். அவன் 14 வது எண்ணுள்ள வீட்டினருகில் உட்கார்ந்துகொண் டிருக்கிறான். அவன் தன் எதிரில் மத்தளம்போன்ற ஒரு கருவியை வைத்துத் தட்டிக்கொண்டிருக்கிறான். அதன்மேல் அவனுக்குப் பிச்சையிடுவோர் போடுவதற்காக ஒரு தகரக் கிண்ணம் வைக்கப்பட்டிருந்தது.

சங்கரதாஸ் ஒரு பைசாவெடுத்து அக்கிண்ணத்தில் போட்டான். அப்படிப் போடும்போது அவன் அக்கிண்ணத்தினடியிலிருந்த ஒரு மடித்த சிறு கடிதத்தைக் கையிலெடுத்துக்கொண்டான். பிச்சைக்காரன் "அய்யா! குருடனுக்கு மனமிரங்கி உதவி செய்ததற்காகக் கருணாநிதியாகிய ஈசுவரன் உமக்கு நல்லாசீர்வாதமளிப்பான்" என்றான்.

சங்கரதாஸ் முதலியவர் அங்கிருந்து சற்று தூரத்திலிருந்த ஒரு மறைவானவிடத்திற் சென்று அச்சீட்டைப் பிரித்துப் பார்த்தார்கள். அதில் "விபாங்கன் வெளியில் சென்றிருக்கிறான்." என்று வரையப்பட்டிருந்தது

வரதாஸிங் சங்கரதாஸை நோக்கி "நாம் இப்போது என்னசெய்வது?" என்றான்.

சங்கரதாஸ் துரிதமாய் "எப்படியாயினும் உள்ளே நுழையவேண்டியதே." என்றான். உடனே யாவரும் நேராய் அவ்வீட்டின் முன் சென்றார்கள். சங்கரதாஸ் தந்திரமாகக் கதவைத்திறந்ததும் யாவரும் உள்ளே நுழைந்தார்கள்.

இவர்கள் உள்ளே சென்று படிகளிலேறி விபாங்கன் மறைந்து வசிக்கும் அறைக்குச் செல்லும்போது பின் அறையிலிருந்த ஒரு வேலைக்காரன் ஆட்கள் யாரோ வரும் சத்தத்தைக்கேட்டதும் கதவண்டை வந்து எட்டிப்பார்த்தான். சங்கரதாஸும் வரதாஸிங்கும் உடனே பாய்ந்து அவனைப் பிடித்துக்கொண்டு அவனுக்கு விலங்கு பூட்டி விட்டார்கள்.

சங்கரதாஸ் "வரதாஸிங்! நீ இவனைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்" என்று கூறிவிட்டுப் பின் அறைக்குச் சென்றான்.

---

## 38—வது அத்தியாயம்.

விபாங்கன் செய்யும் பெருஞ்சூழ்ச்சிக ளடங்கிய காரியங்களில் மிக்க அயோக்கியர்களான கீழ்த்தரப் போக்கிரிகளெல்லாம் அவனுக்கு அறிமுகமா யிருப்பதோடு, மேல் அந்தஸ்திலிருக்கும் மரியாதையான கள்ளர்களும் அவனுக்கு அறிமுகமாகி யிருக்கிறார்கள்.

இப்போது நாம் கூறப்போகும் விஷயம் நன்கு விளங்குவதற்காகச் சில விஷயங்களை யிங்குக் கூறவேண்டியது அவசியமாயிருக்கிறது. இக்காலத்தில் உலகநீதி யெப்படி யிருக்கிறதெனில்:—ஒரு மனிதன் மற்றொருவனைச் சூதாலும் தந்திரத்தாலும் வஞ்சித்தால் அவன் சுத்த மோசக்காரன் அயோக்கியன் என்று யாவராலும் இகழப்படுவான். என் தண்டிக்கவும் படுவான். அதேகாரியத்தை ஒரு இராஜாங்கம் செய்யின் அது இராஜதந்திரம் என்று நியாயமானதாகவே கருதப்படுகிறது. ஒரு இராஜாங்கத்தைத் தண்டிப்பதற்கு யாருக்குச் சக்தியிருக்கிறது? இல்லை.

ஒரு துரைத்தனத்தார் இன்னொரு துரைத்தனத்தாருடைய இரகசியங்களைக் கைப்பற்ற முயலும்போது அத்தகைய அக்கிரமச் செய்கையைச் செய்ய யார் உதவியாக வருவார்கள்? சுத்த அயோக்கியர்-எத்தகைய பாதகச்செயல்களுக்கும் அஞ்சாத பரமதுஷ்டர்களே பணத்திற்காக அத்தகைய வேலைசெய்ய உடன் படுவார்கள். இத்தகைய விஷயங்கள் மேல் நாட்டில் அனேகம் நடந்தன வென்றும் இப்போதும் சமீபகாலத்தில்கூட நடந்திருக்கின்றன வென்றும் சரித்திரங்களால் வெளிப்படையாய் அறிகிறோம்.

இத்தகைய விஷயங்களில் விபாங்கனும் கைதேர்ந்த ஒருவன். ஆகையால் அவன் ஏதோஒரு காரியத்தைச்செய்ய அன்னிய துரைத்தனத்தால் அமர்த்தப்பட்டிருந்தான்.

விபாங்கன் இத்தகைய இக்கட்டில் சிக்கிக்கொண்டிருக்கும்போது, சங்கரதாஸுக்கு இந்திரபுரி துரைத்தனத்தாரிடமிருந்து மேலே நாம் கூறிய கடிதம் வந்த முன்தினம் விபாங்கனுக்கு அன்னிய துரைத்தனத்தைச்சேர்ந்த காரியஸ்தர்களின் இரகசிய இலாகா அதிகாரிகளிடமிருந்து ஒரு கட்டளை வந்தது. அதில் அவன் ஒரு தூதரைச் சந்திப்பதற்காகப் பெரிய தீவின் ஜலசந்தியோரத்திலிருக்கும் கரையில் ஒரு பாறையருகில் வரவேண்டுமென்று கட்டளை யிடப்பட்டிருந்தது.

விபாங்கனுக்குச் சங்கரதாஸ் எங்கே தன்னைப் பின்தொடர்ந்து வந்து பிடித்துக் கொள்வானோவென்று மிக்க பீதியாகவே யிருந்தாலும் அக்கட்டளையை நிராகரிக்க அவனால் முடியாது. இப்போது விபாங்கன் செல்லவேண்டிய இடத்திற்கருகில் சில இலட்சாதிகாரிகள் நாட்டு மாளிகைகள் கட்டியிருக்கிறார்கள். சந்திராபாய்க்கும் அங்கொரு மாளிகை யமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது இன்னம் திறக்கப்படவில்லை.

ஆயினும் அச்சங்கதி விபாங்கனுக்குத் தெரிந்திருப்பதால் அவன் சற்று திருப்தியோடேயே நகரைவிட்டு இரகசியமாய் வெளிப்பட்டான். விபாங்கன் பாறைகள் நிறைந்த அந்தக் கடற்கரைபோய்ச் சேர்ந்ததும் அங்கு உட்கார்ந்து அலைமோதும் கடலை நோக்கிக்கொண்டிருந்தான். நான்கைந்து நிமிடங்களுக்குள் ஒரு பக்கத்திலிருந்து ஒரு படகு வருவதைக் கண்டான். இரண்டு பலசாலிகள் அதை யோட்டிக்கொண்டு வந்தார்கள். அப்படகிற்குள் இருவர் உட்கார்ந்திருந்தார்கள்.

படகு பாறைகளுக்கிடையிலுள்ள மணல் கரையின் ஓரத்தில் வந்து சேர்ந்ததும் படகில் உட்கார்ந்திருந்த இரண்டு அதிசயமான ஆட்களும் கரையில் குதித்தார்கள். விபாங்கன் அவர்களுக்கு மரியாதையோடு வந்தனமளித்தான். அவர்களில் ஒருவன் விபாங்கனை நோக்கி,

"நாங்கள் இரகசிய இலாகாவைச் சேர்ந்தவர்கள். இந்திரபுரி நாட்டானுகிய சங்கரதாஸ் என்பவனைப் பிடிக்கும்படி எங்களுக்குக் கட்டளை யிடப்பட்டிருக்கிறது." என்றதே விபாங்கன் புன்னகைபுரிந்தான். இதனுல் இரண்டு வழிகளிலும் தனக்கு மிக்க அனுகூலமுண்டாகுமென்று எண்ணினன்.

அவனிடம் பேசியவன் கூறத்தொடங்கி "எங்கள் இலாகாவிற்கு இப்போதுதான் ஒரு சமாசாரம் எட்டியிருக்கிறது. அதாவது சங்கரதாஸ் கம்பியில்லாமலே மின்சாரத்தால் வேலைசெய்யும் ஒருவிதப் புது டார்பிடோபடகை யவன் கண்டு பிடித்திருக்கிருன். அதன் மாதிரியொன்று இந்திரபுரி இராஜாங்கக் கடற்படை யிலாகாவால் பார்வை யிடப்பட்டு ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஒப்புக்கொண்டதாக அவனுக்கு அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்துகொண்டிருக்கிறது" என்றுன்.

அவன்கூட வந்தவன் அங்கிருந்த மணலில் சுருட்டுபோல் ஒரு உருவம் எழுதி விபாங்கனுக்கு அதைக்காட்டி "சங்கரதாஸ் செய்தமாதிரிப் படகுகள் இம்மாதிரிதானிருக்கும். ஒன்று இந்தத் துறைத்தனக் கடற்படையிலாகா அதிகாரியிடமிருக்கிறது. மற்றுென்று சங்கரதாஸிடமே யிருக்கிறது. இரண்டையும் கொண்டுவந்து விடவேண்டும். உன்னுலாகுமா?" என்றுன் விபாங்கன் "ஆகா, என்னுலாகும்" என்றுன். அதன்பின் இருதிறத்தாரும் சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து பிரிந்து விட்டார்கள்.

சங்கரதாஸ் விபாங்கனைப்பிடிக்கச் சூழ்ச்சிகள் செய்து கொண்டிருக்கையில் அதேசமயம் அக்கள்ளன் சங்கர தாஸைப்பிடிக்க, எதிர்பாராத சந்தர்ப்பம் கிடைத்ததால், ஆலோசனை செய்து கொண்டிருக்கிறான்.

இந்திரபுரி இராஜ்ஜியத்தின் துரைத்தன இலாகாக்க ளின் தலைமை ஸ்தலங்களனைத்தும் விஸ்வபுரியென்ற நகரி லிருக்கின்றன. கடற்படையிலாகாத் தலைமை ஸ்தலமும் அங்குதா னிருக்கிறது. விஸ்வபுரியும் மிக்க செல்வம்பொருந் திய ஒரு பிரம்மாண்டமான நகரம். சங்கரதாஸ் விபாங்க னைப் பிடிக்க வந்த மறுநாள் விஸ்வபுரியில் இந்திரபுரி இரா ஜாங்கத்தின் சைனிய இலாகா மற்ற இலாகா முதலியவற் றின் தலைவர்கள் சபைகூடிச் சங்கரதாஸ் அனுப்பிய டார் பிடோ படகைப்பற்றி ஒரே முடிவான தீர்மானம் செய்யக் கருதி ஆலோசனை செய்யத் தொடங்கினார்கள். இத்தகைய கருவி தங்களிடம் இருந்தால் உலகில் சண்டையே நடக்க வொட்டாது செய்யலாம் என்று அவர்களுக்குப் புலப்பட் டது. அவர்கள் சபைகூடிய பெரிய சபாமண்டபத்தில் கடற் படையிலாகா ஆட்களோடு துரைத்தனப் பணத்தைச் செலவுசெய்ய யாரார் அனுமதி வேண்டுமோ அவர்களெல் லாம் வந்திருந்தார்கள். அக் கூடத்திலிருந்த ஒரு சாளரத்தி னோரத்தில் சுருக்கெழுத்து டைப் அடிக்கும் ஒருபெண் உட் கார்ந்திருந்தாள்.

சபையோ தாங்கள் அந்த டார்பிடோவைப் பற்றி யாலோசனை செய்து முடிந்ததும் அந்த டார்பிடோவை மேஜைமேல் சுருக்கெழுத்து அச்சடிக்கும் ஆளின் அருகில் வைத்து விட்டார்கள். அந்த ஆள் ஒருபக்கம் கடிதத்தில் அச்சடித்ததும் தன் கடியாரத்தை யெடுத்து நோக்கினான். அதில் மணி சரியாக மூன்றாயிற்று. அவன் உடனே சட்

டென்று அந்த மாதிரி டார்பிடோவை யெடுத்ததும் சாளரத்தின் வழியாய் வெளியில் விசிறி யெறிந்துவிட்டான்.

சாளரத்தின் வெளியிலிருந்த செடிகளின் மறைவில் விபாங்கனிடம் கடற்கரையில் வந்து பேசிய ஆட்களில் ஒருவன் சில நிமிடங்களாக வந்து மறைந்துகொண்டிருக்கிறான். இவை யாவும் முன் யோசனையோடு செய்த ஏற்பாடென்று இதை வாசிப்போர் சுலபமாக அறிந்து கொள்ளலாம். அவன் சாளரத்தின்மேலேயே கண் வைத்திருந்தான். கடைசியில் அவன் எதிர்பார்த்த காலம் வந்துவிட்டது. மாதிரி டார்பிடோ சாளரத்திலிருந்து வெளியில் எறிபப்பட்டதும் அவன் பாய்ந்துபோய் ஜாக்கிரதையாக அதை யெடுத்துக்கொண்டு உடனே அங்கிருந்து வெளித்தாண்டி விட்டான்.

* * * *

விபாங்கன் தான் சங்கரதாஸைப் பிடிக்கவேண்டுமென்று அன்னியநாட்டு இரகசிய ஒற்றர் கூறிய ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண்டான். ஆதலின், அக்காரியம் கைகூடுவதற்குத் தனக்கு வேண்டிய ஆட்களையெல்லாம் கண்டு காரியத்தைக்கூறி ஏற்பாடு செய்தபின் தன் வாசஸ்தலத்திற்குத் திரும்பினான்.

விபாங்கன் தன் வாசஸ்தலத்தினருகில் வந்து உள்ளே நுழையும்போது அருகிலிருந்த குருட்டுப் பிச்சைக்காரனைக் கண்டான். பாம்பின்கால் பாம்பு அறியும் என்பதோடு குற்றத்தைச் செய்யப்போகும் ஒருவனுக்கு எந்தச் சமயத்தில் யார் நம்மைப் பார்ப்பார்களோ என்ற திகில் எப்போதுமிருக்கும். அதிலும் விபாங்கன் பிரமாதமான காரியங்களைச் செய்பவன். தன் எதிரியாகிய சங்கரதாஸ் மிக்க சாமார்த்தியமான ஆள் என்று அவன் அறிவான். இதனால் அவன் எந்த அற்ப விஷயத்திலுங்கூட எச்சரிக்கையாக விருப்பது

ஓர் ஆச்சரியமல்ல. அதிலும் தன் எதிரியாகிய சங்காதாஸ் பிரசித்திபெற்ற துப்பறிபவன் என்று தனக்குத் தெரிந்திருக்கும்போது அவன் மிக்க ஜாக்கிரதையாகவே யிருக்கக் கருதுவது சுபாவமே.

ஆகையால் அங்கிருக்கும் பிச்சைக்காரனை, அதிலும் குருட்டுப்பிச்சைக்காரனைக் கண்டதே யவனுக்குச் சந்தேகமுண்டாகிவிட்டது. ஆகையால் அவன் அந்தக் குருட்டுப் பிச்சைக்காரனைச் சற்று உற்று நோக்கியதும் வீட்டிற்குள் செல்லாமல் ஒருநிமிஷம் சிந்தித்து சோாக வீதியின் கோடியை நோக்கிச் சென்றான்.

விபாங்கன் தான் வசிக்கும் வீதியைக்கடந்து பக்கத்து வீதிக்கு வந்து தன் வீட்டின் பின்பக்க வாயிற்படியருகில் வந்து, யாரும் தன்னைத் தொடர்ந்து வரவில்லையென்று பார்த்துக்கொண்டபின் அப் பின்பக்கவழியாய் வீட்டிற்குள் நுழைந்தான். அங்கிருக்கும் படிகளின் வழியாக ஏறிப் போய்க் கடைசியில் மேலிருந்த ஒரு மச்சு அறைக்குச் சென்று, அங்கிருந்த வெறுஞ்சுவரைத் தடவினான். அதில் இருக்கும் ஏதோ இரகசியவழியைத்திறக்கும் கள்ளச்சூத்திரத்தைத் தேடுகிறவன்போலிருந்தது அவன் செய்கை.

*　　　*　　　*　　　*

அச்சமயந்தான் சங்காதாஸும் வாதாஸிங் முதலியவர்களும் அவ்வீட்டிற்குள் நுழைந்து அகப்பட்டவர்களைச் சிறைசெய்துவிட்டு மேல்மாடியில் ஒரு அறையில் சென்று சோதனை செய்கிறார்கள். விபாங்கன் வீட்டின் பின்பக்க வழியாய்ச் சென்று மேலிருந்த ஒரு அறையிலுள்ள கள்ள வழியாய் சங்காதாஸும் வாதாஸிங்கும் இருக்கும் அறைக்குப் பின் அறையில் சென்று அவர்களை நோக்கினான்.

சங்காதாஸ் இருக்குமறையில் அவன் முன் ஒரு பெரிய நிலைக்கண்ணாடி யிருந்தது. சங்காதாஸ் அதை நோக்கிய

போது பின் அறையின் சுவரில் தைக்கப்பட்டிருந்த பல கைகளில் ஒன்று கதவுபோல் கொஞ்சம் திறக்கப்பட்டதும் அவ்வழியாய் விபாங்கன் எட்டிப்பார்ப்பதும் தெரிந்தது.

வரதாஸிங் அதைக் காணவில்லை. சங்கரதாஸ் பின் அறைச்சுவரில் கள்ளக்கதவிருக்கிறதென்றும் விபாங்கன் அங்கிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறுனென்றும் உணர்ந்து கண்ணுடியில் பிரதிபலித்ததைக் காணுதவன்போலவே நடிக்கத்தொடங்கினுன். சங்கரதாஸ் ஒன்று மறியாதவன்போல் பக்கத்து அறைக்குச் செல்பவன்போல் பாசாங்கு செய்து பின் அறையின் சுவரிலிருந்த ஒரு திரையின்பின் மறைந்து கொண்டான்.

வரதாஸிங் சாதாரணமாய் முன் சென்றுன். விபாங்கன் சுவரிலிருந்த கள்ளக்கதவை மெதுவாகத் திறந்து கொண்டு ஒரு கூர்மையான கத்தியைத் தன் கரத்தில் பிடித்துக்கொண்டு வெளிவந்து வரதாஸிங்கின் பின் பூனைபோல் நகர்ந்து வந்தான். அவன் எந்த விநாடியிலும் வரதாஸிங்கைக் குத்திக் கொல்லும்படியானவிதமாய்த் தன் கத்தியை யுயரத் தூக்கிக்கொண்டு வந்தான். அவன் வரதாஸிங்கின் அருகில் நெருங்கிவிட்டுத் தன் காரியம் பலித்ததென்று கருதிச் சந்தோஷத்தோடு அவனைக்குத்தச் சமீபத்தில் நெருங்கினுன்.

அச்சமயம் சங்கரதாஸினிடமிருந்து ஒரு சத்தம் கிளம்பியதும் இருவர் போராடுவதுமாகிய சந்தடி வரதாஸிங்கின் செவிகளில் வீழ்ந்தது.

நடந்த சங்கதி யென்னவெனில் பின் அறையின் சுவர் ஓரத்திலிருக்கும் திரையின் பின்னுல் ஒளிந்திருந்த சங்கரதாஸ் விபாங்கன் நடக்கையைக் கண்டதும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து விபாங்கன் கரத்திலிருந்த கத்தியை யொரே

பலம்பொருந்திய பிடியாற் பிடிங்கினுன். கத்தி சத்தத்தோடு கீழே வீழ்ந்தது.

சந்தடியைக்கேட்ட வாதாஸிங் சட்டென்று திரும்பிப் பார்த்து விஷயத்தை யொருவாறுணர்ந்து உடனே சங்கரதாஸுக்கு உதவியாகச் சென்ருன். விபாங்கன் சற்று பலசாலியான ஆளே-ஆயினும் சங்காதாஸ் வரதாஸிங் இவர்கள் இருவர்க்குமுன் அவன் பலம் ஓங்கவில்லை. இருவரும் சேர்ந்து இரண்டொரு நிமிடங்களில் அவனை யொடுங்கச் செய்து அவன் கரங்களில் விலங்கை மாட்டிப் பூட்டி விட்டார்கள்.

சங்கரதாஸ் "ஓ! வரதாஸிங்! நான் சிறையாளர்களைப் பார்த்துக்கொண்டு இங்கு இருக்கிறேன். நீ சென்று போலீஸ்காரரை யழைத்து வா!" என்ருன்.

வரதாஸிங் போலீஸ் உத்தியோகஸ்தனைத் தேடிக் கொண்டு தட்சணம் புறப்பட்டான். விபாங்கன் சுவரின் ஓரத்தில் சுளித்தமுகத்தோடு நின்றுகொண்டிருக்கிருன். அவன் மனோ நிலைமை யச்சமயம் எவ்வாறிருக்க வேண்டுமென்பதை யிதை வாசிப்போரே யூகித்துக்கொள்ளலாகும். சங்கரதாஸையே பிடித்து அன்னிய நாட்டாரிடம்கொடுத்து விடலாமென்றும், அவன் புதிதாகக் கண்டுபிடித்த டார்பிடோவின் மாதிரியையும் கண்டுபிடித்து அன்னிய நாட்டாரிடம் கொடுத்துப் பெருந்தொகையான பணம் பெறுவதோடு, சங்கரதாஸின் மேலிருக்கும் தமது வஞ்சத்தையும் பூரணமாகத் தீர்த்துக்கொள்ளலாம் என்று சந்தோஷத்தோடு வீட்டிற்கு வந்தவன் தானே பிடிக்கப்பட்டதை யறிந்தபோது அவன் மனம் சொல்லொணு வேதனையடையும் என்பது தெரிந்த விஷயமே.

விபாங்கன் அறையில் நிற்கு மிடத்திற்குச் சற்று தூரத்தில் அவனுக்கெட்டாத விடத்தில் மணியடிக்கும் கயிறு

ஒன்று தொங்குகிறது. சங்கரதாஸ் கையில் ஆயத்தமாகப் பிடித்த கைத் துப்பாக்கியோடு அங்கிருந்த மேஜையைநோக்கிக்கொண்டிருக்கிறான். அங்கேதேனும் உளவகப்படுமாவென்று அவன் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

விபாங்கன் மெதுவாக ஒவ்வொரு அங்குலமாய் மணியடிக்கும் கயிற்றை நோக்கி நகர்ந்துகொண் டிருக்கிறான். அவன் அதனருகிற்சென்று அதைப் பிடித்திழுப்பதற்காக விலங்கு பூட்டப்பட்டிருக்கும் தன் கரங்களை நீட்டினான். எப்பொழுதும் மிக்க சாக்கிரத்தையாகவேயிருக்கும் சங்கரதாஸ் இவன் விஷயத்தில் அஜாக்கிரதையா யிருப்பானோ? இவன் மணியடிக்கும் கயிற்றைப்பற்றி யிழுக்க கரத்தை நீட்டிய சமயம் சங்கரதாஸ் பார்த்து விட்டான். உடனே துப்பாக்கியால் சுட்டான். விபாங்கன் உடனே சுருண்டு கீழே வீழ்ந்தான். சங்கரதாஸ் அவனருகில் ஓடினான்.

---

## 39-வது அத்தியாயம்.

போலீஸ்காரரை யழைத்து வரச்சென்ற வரதாஸிங் அடுத்த வீதியின் கோடியில் ஒரு போலீஸ்காரனைச் சந்தித்துச் சங்கதியைக்கூறினான். அவன் உடனே வரதாஸிங்கை யழைத்துக்கொண்டு இரண்டு மூன்று வீதிகளுக்கப்பாலிருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்குச்சென்றான். அங்கிருந்த உத்தியோகஸ்தனிடம் சங்கதி கூறப்பட்டதும் துரிதமாகவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சற்று நேரத்திற்குள் போலீஸ்காரர் ஒருவண்டியோடு விபாங்கன் கள்ளத்தனமாக மறைந்து வசித்துக்கொண்டிருந்த வீட்டின்முன் வந்து நின்றார்கள். உடனே வரதாஸிங் போலீஸாரோடு

வீட்டிற்குள் நுழைந்தான். வாயிற்படியில் ஒரு போலீஸ் காரன் காவல் நிறுத்தப்பட்டான்.

வரதாஸிங் உள்ளே சங்கரதாஸ் முதலியவர்கள் இருக்கும் அறைக்குச் சென்றபோது அங்கிருந்த காட்சியைக் கண்டு மிக்க வியப்படைந்தான். ஏனெனில் விபாங்கன் தரையில் வீழ்ந்து கிடப்பதையும், சங்கரதாஸ் அவன் புயத்தில் காயம்பட்டு வடியும் இரத்தத்தை நிறுத்தக் கட்டுக்கட்டிக்கொண் டிருப்பதையும் கண்டான்.

வரதாஸிங்கும் ஒரு போலீஸ் ஸார்ஜெண்டும் திரும்பி வந்ததைக் கண்டதே சங்கரதாஸ் "ஸார்ஜென்ட்! சுகந்தானா?" என்று வினவினான். முன் ஒருமுறை விபாங்கன் அவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டு போய்விட்டதை நினைத்துக்கொண்டு ஸார்ஜென்ட் புன்னகை புரிந்துகொண்டே "இச்சமயம் நான் சரிப்படுத்திவிட்டேன் என்று ஒப்புக்கொள்வாய் என்று நம்புகிறேன்" என்றான்.

சங்கரதாஸின் பார்வை விபாங்கன் இழுக்கச் சென்ற அந்த மணியடிக்கும் கயிற்றின்மேல் சென்றது. விபாங்கன் என்னத்திற்காக அதை யிழுக்கப்போனான்? அதை யிழுத்தால் என்னநேரிடும்? என்பதை யறிய சங்கரதாஸ் ஆவல் கொண்டான். அதன்மேல் அவன் வரதாஸிங்கை நோக்கி "நீயும் ஸார்ஜெண்டும் இக்குற்றவாளியை அடுத்த அறைக்குக் கொண்டுபோங்கள். நான் இதன் உண்மை யென்னவென்று அறிய விரும்புகிறேன்" என்றான்.

ஸார்ஜெண்டும் வரதாஸிங்கும் அவ்வாறே விபாங்கனையும் அவன் ஆளையும் அழைத்துக்கொண்டு வாயிற்படிக்கு வெளியில் நின்றார்கள். உடனே சங்கரதாஸ் அந்த மணியடிக்கும் கயிற்றைப் பிடித்திழுத்தான். தக்ஷணம் ஒரு வெடிச்சத்தம் கிளம்பியது. அங்கு சுவரில் மறைத்து வைக்

கப்பட்டிருந்த ஒரு துப்பாக்கியினின்று வெடி கிளம்பியதும் விபாங்கன் முன்பு நின்றிருந்த விடத்திற் கெதிரிலிருந்த மேஜையின் முன்பாக நாலாபக்கங்களிலும் குண்டுகள் பறந்து வந்து யாவற்றின்மேலும் தாக்கிக் கண்ணுடிகளை யுடைத்தும், பாத்திரங்களைச் சிதறச்செய்தும் சாமான்களைத் துளைத்தும் உடைத்தும் சேதப்படுத்தின.

இக்காட்சியைக்கண்ட வரதாஸிங் ஸார்ஜென்ட் முத லியவர்கள் மிக்க வியப்பும் பிரமையுமடைந்து விட்டார்கள். சங்கரதாஸ் மட்டும் இப்படி நடக்குமென்று முன்னமே யெதிர் பார்த்தவன்போல் "ஓ! அப்படித்தானே!" என்று சாந்தமாய்த் தலையசைத்துவிட்டு, போலீஸாரை நோக்கி "அடே! உங்களில் இருவரை யிங்கு காவலாய் விட்டுப் போகிறேன். நீங்கள் காவலிருப்பதோடு இங்கு இன்னும் யாரேனும் வந்தால் அவர்கள் யாராயினும் சரி கைதுசெய்து விடுங்கள். இருவர் வாருங்கள் சீக்கிரம்" என்றான்.

போலீஸார் எப்போதும் போர்வீரருக்கு இரண்டாவ தாக வேலை செய்யவேண்டியவர்கள். இத்தகைய சந்தர்ப் பத்தில்தான் அவர்கள் தங்கள் தைரியத்தையும் புத்தி சாமார்த்தியத்தையும் காட்டிப் புகழ்பெற முன்வரவேண் டும். இதற்காக நான் நான் என்று போட்டி போட்டுக் கொண்டு முன் வருவார்கள். அக்குணமில்லாதார் அத் தொழில்களுக்குச் சற்றும் யோக்கியதை யுடையவரல்லர்.

அவ்வாறே இரண்டு போலீஸ் வீரர்களை யங்கு காவல் வைத்துவிட்டு சங்கரதாஸ் வரதாஸிங் இருவரும் கைதிகளை யழைத்துச்செல்லும் ஸார்ஜன்டின் பின் சென்றார்கள். இவர் கள் வெளியில் வரும்போதும் வீதியில் ஜனங்கள் பெருங் கூட்டமாகக் கூடியிருந்தார்கள். அவர்களில் ஏராளமான சீனக்காரர் இருந்தார்கள். அச்சீனக்காரரில் இருவர் ஒருபக்

கம் ஓரமாக நின்று குசுகுசுவென்று பேசிக்கொண் டிருப்ப தைச் சங்கரதாஸ் முதலியவர்கள் கவனிக்கவில்லை. இவர்கள் வீதியைவிட்டுப் புறப்பட்டதே அவர்களும் இவர்களை மெது வாகத் தொடர்ந்து வந்தார்கள்.

சாதாரணமாக ஜீவகாருண்யமுடைய எவரும் காயம் பட்டிருக்கும் குற்றவாளியை வைத்தியசாலைக்கே கொண்டு போவார்களென்றுதான் கருதுவார்கள். அந்த நாட்டில் அந்நீதி நடந்தே வந்தது. விபாங்கன் அன்னிய நாட்டான். அதிலும் பெரிய அக்கிரமங்களையும் கொலைபாதகங்களையும் செய்கிறவன். சங்கரதாஸையே கொல்ல முயல்பவன் என்று தெரிந்திருந்தும் சங்கரதாஸ் அவனை வைத்தியசாலைக்கே கொண்டுபோக ஏற்பாடு செய்தான்.

சங்கரதாஸ் செய்தது அவன் வரையில் நீதியும் சீவ காருண்யமுமாகிய காரியமேயாயினும் கலியுக நீதிக்குப் பொருத்தமானதல்ல. "தீயில் வீழ்ந்த தேளை வெளியில் எடுத்துவிட்டால், அப்படி விட்டவனை யது கொட்டியே தீரும்'' என்பது போலவே யிவ்விஷயத்திலும் நிகழ்ந்தது இதன் விவரம் கதைப்போக்கில் தானே வெளிவருமாதலின் ஈண்டு நாம் கூறுவது மிகையாகும்.

சங்கரதாஸ் கைதியாகிய விபாங்கனை நேராக ஒரு வைத் தியசாலைக்குக் கொண்டுபோகும்படி கட்டளையிட்டான். அதன்படியே யாவரும் சென்றார்கள். சங்கரதாஸும் வரதா ஸிங்கும் போலீஸ் காவலோடு கைதிகளுடன் வைத்திய சாலைக்குள் நுழைந்தார்கள். சங்கரதாஸ் இரண்டு டாக்டர்க ளிடம் விபாங்கனை ஒப்பித்தான்.

அச்சமயம் விபாங்கன் இரத்தப்போக்கால் பலஹீன மாக விருந்தான். ஆயினும் இரும்புபோன்ற அவன் மன வலிமை யவனுக்குப் பலத்தை யளித்துக்கொண் டிருந்தது.

இரண்டு வைத்தியர்களும் ஒரு செவிலித்தாயும், விபாங்கனுக்குச் சங்கரதாஸ் தத்கால சாந்தியாகக் கட்டிய கட்டையவிழ்த்துவிட்டு சரியாகிய சிகிச்சைசெய்யத் தொடங்கிஞர்கள்.

அச்சமயம் வைத்தியசாலையி னெதிரில் ஒரு பெருங் கோஷ்டம் கிளம்பியது. பெருங்கூட்டமான சீனுக்காரர்—சீனுக்காரர் வசிக்கும் பிரதேசத்திலுள்ள கள்ளர்களாகிய ஆடவர் ஸ்திரீகள் அனைவரும்—அங்கு வந்து அழுதுகொண்டும் பிரலாபித்துக்கொண்டும் "அய்யோ! எங்கள் பெருந்தகைமைவாய்ந்த தலைவர் இப்படி அக்கிரமமாகக் கொல்லப்பட்டாரே, அவர் முகத்தையேனும் காட்டுங்கள்" என்று கூக்குரலிடத் தொடங்கினுர்கள்.

வைத்தியர்களில் ஒருவர் அங்கிருந்த வேலையாட்களில் ஒருவனை நோக்கி அவர்களை யப்புறம் செல்லச்சொல் என்ருர். அந்த வேலைக்காரன் சென்று தன்னுல் கூடியவரையில் அவர்களை யப்புறப்படுத்த முயன்ருன். அவர்கள் ஒரு அங்குலம்கூடப் பின்னிடையவில்லை. ஒரே பிடிவாதமாய் "அய்யோ கடவுளே! எங்கள் அருமைத் தலைவர் விபாங்கருடைய முகத்தை மட்டும் காட்டுங்கள்" என்று கூவினுர்கள்.

ஒரு ஆளால் அக்கூட்டத்தைத் தடுக்க முடியவில்லை. அவன் தன்னுலானமட்டும் பார்த்தான். கடைசியில் அவர்கள் ஒரு துரும்புபோல் அவனைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள். காவலன் தானும் அவர்கள் கூடவே யுள் செல்வதே தகுதியென்று சென்ருன்.

அதற்குள் சங்கரதாஸ் விபாங்கனை முறைப்படி யந்த டாக்டர்களிடம் ஒப்பித்துவிட்டான். அவர்களும் அவனை வைத்தியசாலையின் ஒரு அறைக்குக் கொண்டுபோய் விட்டார்கள். அப்போதுதான் சீனுக்காரர் கூட்டம் உள்ளே

நுழைந்துகொண் டிருக்கிறது. சிலர் பிரலாபித்துக்கொண்டும் சிலர் "அய்யோ! அவர் எப்படியிருக்கிறூர்?" "அவர் உயிரோடிருக்கிறூரா?" "பேசுகிறூரா?" என்று பலவிதக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டும் உள் நுழைந்தார்கள்.

அவர்கள் தங்கள் தலைவனைக் காணவேண்டுமென்று ஒரே பிடிவாதமாக விருப்பதால் டாக்டர்களில் ஒருவர் "அக் கூட்டத்தாரில் ஒருவனுகிய வெங்கு என்பவன் உள்ளே வந்து விபாங்கனுடைய நிலைமையைக்கண்டு சென்று அவர்களுக்குத் திருப்தியை யுண்டாக்கட்டும். அவன், தான் விபாங்கனுடைய நெருங்கிய சுற்றத்தான் என்கிறுன். இந்தச் சீனுக்காரப்பயல்களெல்லாம் அப்படித்தான் கூறுவது. எப்படியோ ஒழியட்டும்" என்றூர். அங்கிருந்த தலைமை வைத்தியர் அதற்குச் சம்மதித்தார். அவர் அங்கு கூச்சலாக விருப்பதை யறிந்து அப்போதுதான் தமது அறையிலிருந்து அங்கு வந்தார்.

வெங்கு என்பவன் ஒருவித நீல உடை யணிந்திருந்தான். இச்சீனுக்காரர் ஏதேனும் சூதுசெய்வார்கள் என்று வைத்தியசாலையிலிருந்தோர் மிக்க எச்சரிக்கையாகவே யிருந்தார்கள். அவன்மேல் கண்வைத்தே யிருந்தார்கள். அவன் விபாங்கன் இருக்கும் படுக்கை யறைக்குள் நுழைந்ததும் "விபாங்கன் இறந்துபோனுனே?" அப்படியாயின் அவன் தேகத்தைப் பதப்படுத்தி அவன் மூதாதைகள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இடத்திற்கு அனுப்பிவிடவேண்டும். அவன் தன் குடும்பத்தாரிடம் போய்ச் சேர்ந்துவிடவேண்டும். ஆனுல் மிக்க பணச்செலவு. எப்படியாயினும் நாங்கள்........." என்று தன் கரத்தைத் தூக்கி யாட்டினுன். அவன் காட்டியகுறி "இது எங்கள் மதாசாரப்படி மிக்க முக்கியமான விஷயம். இதற்காக எவ்வளவு செலவு நேர்ந்

தாலும் எங்கள் தேசத்தாரே உதவுவார்கள்" என்று கூறுவதுபோலிருந்தது.

வைத்தியர் "அவன் இன்னும் இறக்கவில்லை. இப்போதும் அவனைச் சுகமடையச் செய்யலாமென்றே கருதுகிறோம்" என்றார்.

அச்சமயம் ஒரு செவிலித்தாய் ஒரு காரமான மருந்தை மஞ்சத்திலிருக்கும் விபாங்கன் வாயில் விட்டாள். அது உணர்ச்சியில்லாத ஒரு குழாய்க்குள் செல்வதுபோல் சென்றது. அவன் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் உண்டாகவில்லை.

வெங்கு என்பவன் கடுகடுத்த முகத்தோடு விபாங்கன் உருவத்தை நோக்கியபடியிருந்தான். பிறகு விபாங்கன் முகத்தைத் தடவினான். நாசியைப் பிடித்துப் பார்த்தான். பிறகு மரியாதையாய் இறந்தவர்கள் வாயை மூடுவதுபோல் மூட முயன்றான். கடைசியில் "ஓ! விபாங்கன் மடிந்தான்" என்றான்.

டாக்டர்களில் ஒருவர் தன் துணைவனைநோக்கி இருதயத்தைப் பார் என்றார். அவன் தொட்டுப் பார்த்துத் திடுக்கிட்டு மாரில் வைத்துப்பார்க்கும் கருவியை யெடுத்து வைத்துப்பார்த்தான். "ஓ! இருதயம் துடித்தது. ஆனால் அதுவே கடைசித் துடிப்பு என்று தெரிகிறது" என்றான்.

அச்சமயம் விபாங்கன் கண்களின்மேல் இரப்பை மெதுவாய்க் கீழ் வீழ்ந்ததும், கீழ்த்தாடை வீழ்ந்துவிட்டது. அதைக்கண்ட செவிலித்தாய் உடனே ஒரு குட்டையால் வாயைக் கட்டினாள். உடனே ஒரு சீலையால் விபாங்கன் தேகம் மூடப்பட்டது. ஏனெனில் வெளிப்பார்வைக்கு விபாங்கனுடைய இவ்வுலக சம்பந்தமான பாதகத்தொழில்களனைத்தும் முடிவிற்கு வந்துவிட்டதென்றே தெரிந்தது.

கடைசியில் வெங்கு என்பவன் சீனக்காரரின் வாசஸ் தலத்திற்குச் சென்று, விபாங்கன் சவத்தைக் கப்பலில் ஏற்றிச் செல்வதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. வைத்தியசாலைகளில் இறந்தவர்களைக் கூடியசீக்கிரம் வெளிப்படுத்திவிடவேண்டுமென்பதே நோக்கம். ஏனெனில் அங்கு ஒருவர் இறந்தால் உடனே அச்சங்கதி வைத்தியசாலை முழுமையும் பரவிவிடும். அதைக்கேட்டதே மிக்க காயலாவாக விருப்பவர்களெல்லாம் மனப்பீதி யடைவார்கள். அதனால் அவர்களுக்குக் கெடுதி யுண்டாகும். இக்காரணத்தால் இறந்தவர்களின் சவத்தை யுடனே வெளிப்படுத்தி விடவேண்டுமென்பதே அவர்கள் நோக்கம்.

சற்றுநேரங் கழித்து டாக்டர்களில் ஒருவர் உள்ளே வந்து செவிலித்தாயை நோக்கி "போய்க் கதவைத்திற; சீனக்காரர்கள் தங்கள் சவத்தை யெடுத்துப்போக வருகிறார்கள்" என்றார். வெங்கும் இன்னும் இரண்டு சீனக்காரர்களும் ஒரு சவப்பெட்டியோடு உள்ளே வந்தார்கள். செவிலித்தாயாகிய மாதுக்குச் சவத்தி னருகிலிருக்க வெறுப்பேயாதலின் அவள் தூரத்தில் போய் உட்கார்ந்துகொண்டாள்.

டாக்டர் முறைமைப்படி விபாங்கன் இறந்துபோனான் என்று நற்சாட்சிப்பத்திரம் அளித்துவிட்டார். சீனக்காரர் அவன் தேகத்தைச் சவப்பெட்டியில் வைத்து புஷ்பங்கள் சூடி வாசனை வத்திகள் கொளுத்திக்கொண்டு அவர்கள் மதாசாரப்படி மிக்க மரியாதையோடு வைத்தியசாலையிலிருந்து எடுத்துச் சென்றார்கள்.

இவ்வுலகம் பெருமோச உலகம். இதில் நடந்த உண்மையான பெரியமோசம் என்னவெனில், விபாங்கன் இச்சமயம் எமனையும் ஏமாற்றிவிட்டான், வைத்தியசாலையிலிருந்த

நிபுணர்களாகிய வைத்தியர்களையெல்லாம் ஏமாற்றிவிட்டான். போலீஸ் படைமுழுமையும் ஏமாற்றிவிட்டான். துப்பறியும் நிபுணனாகிய சங்கரதாஸையும் அவன் கூட்டாளிகளையும் யாவரையுமே ஏமாற்றிவிட்டான்.

*  *  *  *

சங்கரதாஸனும் வரதாஸிங்கும் ஸார்ஜென்ட் முதலியவர்களும் விபாங்கனை வைத்தியசாலையில் விட்டதும் போய்விட்டார்கள். ஆதலின் நடந்தசங்கதி யவர்களுக்குத் தெரியாது.

---

## 40 - வது அத்தியாயம்.

சங்கரதாஸனும் வரதாஸிங்கும் சந்திராபாயின் வீட்டில் இருக்கிறார்கள். அவர்கள் விபாங்கன் சிக்கிக்கொண்டதைப்பற்றி சந்தோஷங் கொண்டாடிவிட்டுச் சங்கரதாஸ் கண்டுபிடித்த டார்பிடோ படகைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அச்சமயம் ஜெகநாதன் வந்து சங்கரதாஸை நோக்கி "அய்யா யாரோ இரண்டுபேர் தங்களைக் காணவந்திருக்கிறார்கள்" என்று கூறிக்கொண்டே ஒரு சிறு கடிதத்துண்டையவனிடமளித்தான். அக்கடிதத்தில் "பாரங்குசம் பிள்ளை-இரகசிய இலாகா" என்று அச்சடித்திருந்தது.

அதைக்கண்டதும் சங்கரதாஸ் நீ யவர்களை யுள்ளே யனுப்பு என்று ஜெகநாதனிடம் கூறினான். பிறகு வரதாஸிங், சந்திராபாய், ஜானகியம்மாள் மூவரையும் நோக்கி 'நான் அவர்களிடம் தனியே பேசவேண்டும்; தயவுசெய்து மன்னியுங்கள்" என்றான். அவர்கள் மூவரும் உடனே யெழுந்து தோட்டத்தின்வழியாக அடுத்தவீதியை நோக்கி உலவச் சென்றார்கள். ஜெகநாதன் வந்த இருவரையும்

சங்கரதாஸ் இருந்த அறையில் கொண்டுவந்து விட்டுவிட்டு வீட்டின் பின்பக்கம் சென்ருன்.

இரகசிய இலாகா ஆட்கள் இருவரும் வந்து உட்கார்ந்ததே சங்கரதாஸ் அவர்களைநோக்கி "நண்பர்களே! என்னுலாகவேண்டிய காரியம் ஏதேனுமிருந்தால் சந்தோஷமாய்ச் செய்ய ஆயத்தமாக விருக்கிறேன்" என்ருன்.

பராங்குசம் பிள்ளை நாற்புறங்களிலும் நோக்கி யாருமில்லையென் றுணர்ந்து, சங்கரதாஸ் அருகில் குனிந்து இரகசியமாய் "தாங்கள் கடற்படை யிலாகாவிற் கனுப்பிய டார்பிடோ படகின் மாதிரி களவாடப்பட்டதென்று இப்போதுதான் சமாசாரம் வந்தது" என்றதே,

சங்கரதாஸ் பிரமையடைந்து "என்ன? களவாடப்பட்டதா?" என்ருன். பராங்குசம் பிள்ளை "ஆம். நமது கடற்படையிலாகாவிலிருந்த எவனே துரோகி அன்னியதுரைத்தனத்தின் காரியஸ்தனுக்கு உளவாயிருந்து இது நடந்திருக்கிறதென அஞ்சுகிருேம்" என்ருன்.

சங்கரதாஸ் நாம் கண்டுபிடித்த அந்த அபாயகரமான கருவி எதிரிகளின் கரத்தில் சிக்கியிருப்பதால் அவர்கள் அதை யென்ன செய்வார்கள் என்று சிந்திக்கலானுன். பராங்குசம் பிள்ளை பின்னுங் கூறத்தொடங்கி, அந்த அன்னிய இராஜாங்க ஆள் விபாங்கன் என்ற ஒரு சீனுக்காரன் உதவியால் இதைச் செய்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது" என்ருன்.

சங்கரதாஸ் "அந்த விபாங்கனை நானே என்கையால் சிறை செய்தேனே. அவன் இப்போது போலீஸார் வசத்தில் இருக்கவேண்டுமே" என்ருன். பராங்குசம் பிள்ளை "ஓ! அப்படியாயின் அவன் தப்பித்துக்கொண்டு போய்விட்டது உமக்குத் தெரியாதுபோலும்" என்ருன்.

சங்கரதாஸ் இதைக்கேட்டதே ஒன்றும் பேச முடியாமல் விழித்தான். அச்சமயம் திடீலென்று கீழிருந்து "ஓ! உதவி! உதவி!" என்ற கோஷ்டம் கேட்டது.

* * * * *

சங்கரதாஸ் தான் கண்டுபிடித்த டார்பிடோ படகை சந்திராபாய் முதலியவர்களுக்குக் காட்டிக்கொண்டிருக்கையில், விபாங்கன், அன்னியநாட்டுக் காரியஸ்தனிடம் ஏற்பாடு செய்துகொண்டு அந்த டார்பிடோ படகின் மாதிரிகளைக் களவாடுவதற்காக ஏவிய ஆட்கள் சுறுசுறுப்பாய் வேலைசெய்யத் தொடங்கினார்கள். அவர்களில் ஒருவன் சங்கரதாஸ் வரதாஸிங் இவர்களை இரசாயனசாலை யறையிலிருந்து சந்திராபாய் வீட்டிற்குத் தொடர்ந்து வந்தான்.

இவர்கள் உள்ளே சென்றதும் அவன் வீட்டின் பின் பக்கமாய் நுழைந்து அங்கிருந்த திறந்தவழியாய், பழைய உக்கிராண அறைக்குள் நுழைந்தான். அங்கிருந்து அவன் மெதுவாய் சங்கரதாஸ் முதலியவர்கள் இருக்கும் புத்தகசாலையறை யருகிற்சென்று அங்குநின்று அவர்கள் பேசுவதைக் கேட்டான். பிறகு கள்ளத்தனமாய் புத்தகசாலையிலின்றும் வெளிச்சென்றான்.

அவன் உள்தோட்டத்திலிருந்த பனைமரங்களில் சந்தில் பார்த்துக்கொண்டே வரும்போது சங்கரதாஸ் முதலியவர்கள் அதைவிட்டுப் புறப்பட்டு புத்தகசாலை யறைக்குச் சென்றார்கள். அதற்குமுன் அவர்கள் அந்தமாதிரி டார்பிடோ படகை யங்கிருந்த செய்குட்டையில் விட்டு வேடிக்கைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். அங்கிருந்து புறப்படும்போது அப்படகைக் குட்டையிலேயே விட்டுச் சென்றார்கள். உள்ளே அங்குவந்த கள்ளன் சுற்றுமுற்றும் பார்த்தபோது குட்டையிலிருந்த மாதிரிப்படகைக் கண்டான்.

அதைக் களவாடிக்கொண்டுபோகவே அவன் இவ்வளவு கஷ்டங்களை யெடுத்துக்கொண்டானதலின் அதைக்கண்டதும் மிக்க சந்தோஷத்தோடு அதைக் காத்திலெடுத்துப் பார்த்தான்.

அவன் அதை மடியில் வைத்துக்கொண்டு புத்தகசாலை யறைக்குத் திரும்ப முயன்றான். அச்சமயம் ஜெகநாதன் அங்குவரும் சத்தத்தைக்கேட்டதும் மறுபடி தோட்டத்திற்கே திரும்பினான். அச்சமயம் ஜெகநாதன் யாரோ துரிதமாகச் செல்வதைக்கண்டான். அவனுக்கு மிக்க சந்தேகமுண்டாகிவிட்டதால் அவன் அந்த ஆள் சென்றவழியைத் தொடர்ந்து சென்றான்.

கள்ளன் சிறுதோட்டத்திற்குச் சென்றதும் அங்கிருந்த ஒரு கண்ணாடிச் சாளரத்தைத் திறந்துகொண்டு வெளித்தோட்டத்திற் பிரவேசித்தான். அச்சமயம் அங்கு ஆட்களின் அரவம்கேட்டுத் திகைத்து நின்றான். அப்போது தான் வரதாஸிங், சந்திராபாய், ஜானகியம்மாள் மூவரும் சங்கரதாஸை விட்டுப்பிரிந்து உலவ அவ்வழியே செல்கிறார்கள். சந்திராபாய் தன் தோட்டத்திலிருக்கும் ஒரு ரோஜா மலரை வரதாஸிங்குக்குக் காட்டிக்கொண்டிருக்கிறாள்.

கள்ளன் அங்கிருந்த பனைகளின் பின் மறைந்துகொண்டான். இப்போது தன் நிலைமை அபாயகரமானதென்றும், எந்த விநாடியிலும் தான் பிடிக்கப்படலாமென்றும் அவன் புத்திக்குப் புலப்பட்டது. தான் அகப்பட்டுக்கொண்டாலும் தான் களவாடிய மாதிரிப்படகு காப்பாற்றப்படவேண்டுமென்று சிந்தித்து, அவன் அதை யெங்கு ஒளித்துவைக்கலாம் என்று பார்த்தான். கடைசியில் ஒரு பனைமரத்தடியில் சிறுகுழி தோண்டி அப்படகை யதில் வைத்துத் தன் கைக்குட்டையை மேல்மூடி மண்ணால் கூடியவரையில் மறைத்துவிட்டான்.

ஜெகநாதன் ஒரு மனிதன் செல்வதைக் கண்ணால் கண்டான். ஆனால் நெருங்கிச்சென்று பார்த்தபோது ஒருவரும் புலப்படாமலிருப்பதைக் கண்டதே அவன் திப்பிரமையடைந்துவிட்டான். அவன் வெளியில் செல்லத் திரும்பினன். அச்சமயம் அங்கிருந்த ஒரு சிறு தாளிப்பனஞ்செடி அசைவதைக்கண்டான். அந்த விடத்தை யுற்று நோக்கியபோது அங்கு ஒரு ஆளின் முகம் தெரிந்தது. ஜெகநாதன் உடனே பாய்ந்து சென்றதும் அவனைப் பிடித்தான். கள்ளன் தப்பித்துக்கொள்ள முயன்றதால் இருவரும் அங்கு கட்டிப் புரண்டார்கள். அச்சமயம் ஜகநாதன் போட்டசத்தமே சங்கரதாஸ் முதலியவர்களுக்குக் கேட்டது.

* * * * *

அச்சத்தம் உண்டானபோது சங்கரதாஸும் அவனுடனிருக்கும் இரகசிய இலாகா உத்தியோகஸ்தர்களும் மிகச் சிரத்தையோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் துரிதமாக ஓடிப் பின்பக்கமிருந்த உள்தோட்டத்தில் நுழைந்தார்கள். அப்போதுதான் கள்ளன் எப்படியோ ஜகநாதனுடைய பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு அவனை வீழ்த்திவிட்டுச் செடிகளில் நுழைந் தோடத் தொடங்குகிறான்.

சங்கரதாஸின் மனம் உடனே சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கியது. தான் கடற்படை யிலாகாவிற்கனுப்பிய படகின்மாதிரி களவு போய்விட்டது. விபாங்கன் தப்பித்துக்கொண்டு போய்விட்டான். அவன் மூலமாகவே இக்காரியம் நடப்பதாய்க் கருதப்படுகிறது. ஆகையால் இங்கு வந்தவனும் அவன் ஆள்தானே? இவன் நம்மிடமிருக்கும் மற்றொரு மாதிரியையும் களவாட வந்திருப்பானோ? என்று அவன் புத்திக்குப் புலப்பட்டது. ஆகையால் இரகசிய இலாகா ஆட்கள் கள்ளனைத்தேடிச் சென்றபோது சங்

காதாஸ் குட்டையில் விடப்பட்ட படகைத் தேடிச்சென்ருன். அங்கு சென்று பார்த்ததும் அது போய்விட்டதென்று தெரிந்தது. அவன் உடனே திரும்பி கள்ளனையே தேடிச்செல்ருன்.

இதற்கிடையில் வரதாஸிங் இன்னும் சந்திராபாய் ஜானகியம்மாள் இவர்களோடு தோட்டத்திலே யிருக்கிருன். அவன் செவிக்கு இருவர் போராடும் சத்தம்கேட்டது. பிறகு அத்திக்கை நோக்கியபோது ஒருவன் ஓடுவதையும் இருவர் துரத்திச் செல்வதையும் கண்டு தானும் ஓடும் ஆளைப் பிடிக்கச்சென்ருன். ஆனல் அவன் தப்பித்துக் கொண்டு, தோட்டத்தின் பின்னுலிருக்கும் சுவரை நோக்கியோடினுன். இரகசிய இலாகா ஆட்கள் அவனை நோக்கித் துப்பாக்கிகளால் சுட்டார்கள். கள்ளனுக்கு அடிபடவில்லை. அவன் ஓடிக்கொண்டிருக்கிருன். ஒரு விநாடி கழித்து சாளரவழியாய்ச் சங்கரதாஸ் அங்கு வந்தான்.

சங்கரதாஸ் வரதாஸிங்கைக் கண்டதும் மிக்க ஆவலோடு "நீங்கள் யாரேனும் அந்த டார்பிடோ படகையெடுத்துக்கொண்டு வந்து விட்டீர்களோ?" என்று கேட்டான். வரதாஸிங் "அந்தோ நாங்கள் யாரும் எடுக்கவில்லையே. நீ அதை யெங்குவிட்டாயோ அங்கேயே விட்டுவிட்டு நாங்கள் வந்துவிட்டோம். ஓ கடவுளே! என்னதான் சங்கதி?" என்ருன்.

சங்கரதாஸ் மிக்க கலவரத்தோடும் கோபத்தோடும் "அப்படியாயின் என் இரண்டு மாதிரிப் படகுகளும் களவாடப்பட்டன" என்று கூறியதும் இரகசிய இலாகா ஆட்களின் பின்னல் ஓடினுன். வரதாஸிங்கும் அவன் பின்னல் ஓடினுன்.

கள்ளன் இதற்குள் தோட்டத்தின் பின்பக்கச் சுவரின் உச்சிக்கு ஏறிவிட்டான். அவன் சுவரின் உச்சியிலிருந்து

மறுபக்கம் குதிக்கப்போகும் சமயம் இரகசிய இலாகா ஆட்களில் ஒருவன் சுட்ட குண்டு அவன்மேல் தாக்கியதும் அவன் பொத்தென்று மறுபக்கம் வீழ்ந்தான்.

மறுபக்கம் அவன் ஆள் ஒருவன்வந்து காத்திருந்தான். அதனாற்றான் அவன் அந்த விடத்தை நோக்கி யோடினான். அவனுக்குக் காயம்பட்டாலும் அவன் தன் நண்பன் உதவியால் சமாளித் தெழுந்துகொண்டு அவன் ஆயத்தமாகக் கொண்டு வந்திருந்த ஒருவண்டியில் ஏறிக்கொண்டான்.

சங்கரதாஸ் முதலியவர்கள் சுவரின் மேலேறி மறுபக்கம் சேர்ந்தபோது கள்ளர் வண்டி செல்வதைக் கண்டார்கள். ஆனால் அச்சமயம் நற்காலமாக எதிரில் ஒரு காலி வண்டி வந்தது. சங்கரதாஸ் தட்டென்று அவ்வண்டியின் குதிரைக் கடிவாளத்தைப் பிடித்து நிறுத்தி சாரதியை நோக்கி, "சீக்கிரம் திருப்பு" என்று கூறிவிட்டுத் தன் கூட விருந்தவர்களைநோக்கி "சட்டென்று ஏறுங்கள்" என்றான்.

சாரதி இவன் யாரோ தக்க அதிகாரம் உடையவனென்றுணர்ந்து உடனே வண்டியைத் திருப்பினான். மற்றவர்கள் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். சங்கரதாஸ் "அதோ செல்கிறதே அந்தவண்டியை வேகமாகத் தொடர்ந்துசெல்; விடாதே பத்திரம்?" என்று கூறி வண்டியில் ஏறிக்கொண்டான். தட்சணம் இவர்கள் வண்டி கள்ளர் வண்டியைத் துரத்திச் சென்றது.

* * * * *

நகரத்தில் இரயில் வண்டிகள் வந்து நிற்கும் முடிவான ஸ்டேஷன் ஒன்றிருக்கிறது. விஸ்வபுரியிலிருந்து வண்டி வரும் சமயத்தில் அந்த ஸ்டேஷனில் விபாங்கன் வந்து காத்துக்கொண்டிருக்கிறான். இப்போது அவன் சுமாராகச் சுகமடைந்திருக்கிறான். அவன் ஒரு ஆளின் வரவை யெதிர்பார்த்துக்கொண்டு அங்கு நின்றிருக்கிறான்.

186535

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

(2 - பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடை யவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும், படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஞு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மை யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 64 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூபா | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ... | 4 | 0 | தினகரசுந்தரி | 1 | 0 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | தபால்கோள்ளைக்காரர் | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | ரத்தினபாய் ... | 1 | 12 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | வீரநாதன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2 பாகம் ... | 3 | 8 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| இராஜாமணி ... | 2 | 0 | கமலசேகரன் ... | 1 | 12 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 10 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| ஞானசெல்வாம்பாள் | | | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| 5 பாகமும் ... | 9 | 10 | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| | | | லோகநாயகி | 1 | 0 |

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட், மதராஸ்.